பக்கங்கள் : பத்து
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 மார்கழி 4 வெள்ளிக்கிழமை (19-12-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 21

# நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது!

## புதிதாகச் சோதனை நிலையங்கள்

யாழ்ப்பாணம், டிசம்பர் 19

யாழ். மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலையொட்டி நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. செயலகத்தை அண்டிய பகுதிகளில் புதிய சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ். செயலகத்துக்கு கண்டி வீதி வழியாக மட்டுமே செல்லக் கூடியதாக பல இடங்களில் முள்ளுக் கம்பிகள் போடப்பட்டு குறுக்குப் பாதைகள் மூடப்பட்டுள்ளன.

செயலகச் சுற்றாடலில் சோதனைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், பாதுகாப்பாக தமது நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதை உறுதிப்படுத்துவதே இந்த நடவடிக்கைகளின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# கட்சிகளின் தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் சுறுசுறுப்பு

யாழ்ப்பாணம், டிச. 19

யாழ். மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் இறுதிநாள் நெருங்க நெருங்க தமிழ்க் கட்சிகளின் தலைவர்களின் யாழ்ப்பாணத்துக்கான வருகையும் அதிகரித்துள்ளது.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்துக்கு வந்து, எந்த எந்தச் சபைகளில் போட்டியிடுவது என்பது தொடர்பாக தமது ஆதரவாளர்களிடம் ஆராய்ந்து வருகிறார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குழு ஒன்றும் யாழ்ப்பாணம் வந்து ஆதரவாளர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளது.

''புளொட்'' அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன், மற்றும் அந்த அமைப்புப் பிரமுகர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

அவர் வந்து சேர்ந்த கையோடு, யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு அமைப்புப் பிரதிநிதிகளுடன் தேர்தல் குறித்த அபிப்பிராயத்தை பெறும் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

'' தேர்தலை பிற்போடுமாறு அரசிடம் எமது அமைப்பு கோரி வந்தது. அரசு தனது முடிவில் மாற்றம் செய்ய மறுத்ததை அடுத்து இங்கு வந்துள்ளேன்.

'' எமது அமைப்பு யாழ். மாநகரசபையில் போட்டியிட முடிவு செய்துள்ளது. ஏனைய சபைகளில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிட தயாராகவுள்ளோம் '' என்று தர்மலிங்கம் சித்தார்த்தன் அங்கு பேசுகையில் தெரிவித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரனும் அக்கட்சியின் பிரமுகர்களும் நேற்று யாழ்ப்பாணம்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நியமனப் பத்திரம் நேற்றும் தாக்கல் இல்லை

யாழ்ப்பாணம், டிச. 19

யாழ். மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலுக்கு நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்ய நேற்றும் யாழ். செயலகத்துக்கு எந்த ஒரு கட்சியோ அல்லது அணியோ வரவில்லை.

நியமனப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வது கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகியது. நேற்றுவரை எந்தவொரு நியமனப் பத்திரமாவது தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த நியமனப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வதற்காக கொழும்பில் இருந்து வந்த ஆறு அதிகாரிகளும் காலை முதல் மாலை வரை அங்கு காத்திருக்கிறார்கள்.

இறுதி நாளான 23 ஆம் திகதியே சகல கட்சிகளும் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-3)

# இரு மின்மாற்றிகள் நேற்று பண்டாரவளையில் தகர்ப்பு!

## நகரம் இருளில் மூழ்கியது

கொழும்பு, டிச. 19

பண்டாரவளை நகரில் நேற்று அதிகாலை 3.15மணியளவில் இரு மின்மாற்றிகள் இனந்தெரியாத நபர்களினால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டன.

அதிகாலை நேரம் சில வினாடிகள் இடைவெளியில் தொடர்ந்து கேட்ட இரு குண்டு வெடிப்புச் சத்தங்களினால் பண்டாரவளை நகர் அதிர்ந்ததாக அப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இதனால் பண்டாரவளை நகர் முற்றாக இருளில் மூழ்கியுள்ளது. புதிய மின் மாற்றிகள் பொருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மின்விநியோகம் இன்று வழமைக்கு திரும்பும் என இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

பதுளை மாவட்டத்தில் ஒரு மாத காலத்திற்குள் 5 மின் மாற்றிகள் தகர்க்கப்பட்டுள்ளன என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள போதும், இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

மின்மாற்றிகள் ஒவ்வொன்றும் இரண்டு மெகாவாட்ஸ் மின்சாரக் கொள்ளளவை உடையவை.

சம்பவம் நடைபெற்ற போது மின்மாற்றிகளுக்கு அருகே பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் இருக்கவில்லை என்பது விசாரணைகள் மூலம் தெரிய வந்தது.

தியத்தலாவை ஊடாக தற்காலிகமாக மின்சாரத்தை பெற்றுக்கொடுக்க மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

(இ-3-21)

# வதிரியில் மோதல்!

யாழ்ப்பாணம், டிச. 19

வதிரி இருப்பு மதவடிப் பகுதியில் நேற்றுக் காலை 8மணி முதல் ஒன்றரை மணி நேரம் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் இராணுவத்தினர் ரோந்து சென்ற சமயம் இந்த மோதல் இடம்பெற்றதாகவும் —

இந்த மோதலின் போது ஏற்பட்ட சேதம் குறித்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் —

அப்பகுதியில் பாரிய குண்டு வெடிப்புக்களும் இடம்பெற்ற

(10ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப படையெடுத்து வந்திருக்கினம் எண்டு சொல்லுங்கோ.........

## ஈரோஸ் போட்டியிடாது

கொழும்பு, டிச. 19

யாழ். மாவட்டத்தில் தேர்தல் நடக்கக்கூடிய தகுந்த சூழ்நிலை இல்லாத காரணத்தால் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக 'ஈரோஸ்' அமைப்பு பிரமுகர் சுதா மாஸ்டர் நேற்றிரவு தெரிவித்தார்.

தேர்தலில் தமது அமைப்பு பங்கு பற்றுவதில்லை என்று எடுக்கப்பட்ட முடிவுக்கான காரணங்களை விளக்கி அறிக்கை ஒன்றை வெளியிட விருப்பதாகவும் அவர் கூறினார்.

(இ-3)

# உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகம் மீது தாக்குதல்

## வாழைச்சேனைப் பகுதியில் சம்பவம்

கொழும்பு, டிச, 19

நேற்றுமுன்தினம் காலை 7-30 மணியளவில் வாழைச்சேனை உதவிப்பொலீஸ் அத்தியட்சகர் காரியாலயத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலை பொலீஸார் பதில்தாக்குதல் நடத்தி முறியடித்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(10ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு நகர முதல்வரின் வீடு மீது துப்பாக்கிப் பிரயோகம்

## உத்தியோகபூர்வ வாகனம் சேதம்

மட்டக்களப்பு, டிச. 19

மட்டக்களப்பு மாநகர முதல்வர் செழியன் பேரின்பநாயகத்தின் வீடு மீது நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

அதிகாலை 2-45 — 3-15 வரை இடம்பெற்ற துப்பாக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கடலில்மிதந்துவந்தஷெல்லுக்கு இளம்பெண்பலி! 6பேர்காயம்!!

## எழுவைதீவில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், டிச. 19

கடலில் மிதந்து வந்த ஷெல் ஒன்றை எடுத்துச் சென்று அதை வீட்டில் வைத்து தட்டிய போது அது வெடித்ததில் இளம் பெண் ஒருவர் பலியானார் 6 பேர் காயம் அடைந்தனர்.

எழுவைதீவு 2 ஆம் வட்டாரத்தில் இந்தப் பரிதாபச் சம்பவம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

நவரத்தினராஜா கஜன் (வயது 17) என்பவரே கடலில் மிதந்து வந்த ஷெல்லை எடுத்துச் சென்று வீட்டில் வைத்து தட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் நடராஜா கேதீஸ்வரி (வயது 23) என்ற இளம் பெண்ணே உயிரிழந்தவர் ஆவார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மரத்தில்தொங்கிய பொருளை எடுத்து வீச அது வெடித்தது!

## கட்டைப்பிராயில் 6 வயதுச் சிறுவன் பலி!!

யாழ்ப்பாணம், டிச. 19

மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த பொருள் ஒன்றைக் கண்டெடுத்து அதனை எறிந்த போது அது வெடித்ததில் சிறுவன் ஒருவர் பலியானார்.

ஒட்டுமடம், செழியன் வீதியைச் சேர்ந்த கோகுல

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாக்கியம் ஆறுமுகம்

காரைநகர் பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் தற்போது வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் ஆறுமுகம் அவர்கள் 18-12-97 வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், இராசலட்சுமி, குமாரசாமி, விஜயலட்சுமி, கந்தசாமி, தனலட்சுமி, லோகேந்திரன், கமலசலிங்கம், தியாகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா, கமலாதேவி, சபாரெத்தினம், கணேசநுஞ்சிலி, அருளையா, கங்காதேவி, சந்திரகலா ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

இவரின் இறுதிக் கிரியைகள் இன்று (19 - 12 - 97) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் இல. 200 வண்ணார்பண்ணை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்ததனை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. குமாரசாமி
(மகன்)

(51956)

## இராமுப்பிள்ளை சிவராஜா

(புதுச் செம்மணி றோட், நல்லூர் வடக்கு)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராமுப்பிள்ளை சிவராஜா 14-12-1997 அன்று ஸ்கந்தபுரத்தில் காலமானார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சி நாகரத்தினம் (மனைவி)
கு. காந்திமலர் (மகள்)

சதிரவேலு குகநாதன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

(51946)

## தாமோதரம்பிள்ளை கிருஸ்ணசாமி (பத்தர்)

பூநாறிமரத்தடியை வசிப்பிடமாகக் கொண்ட தாமோதரம்பிள்ளை கிருஸ்ணசாமி (பத்தர்) 18 12 97இல் 8-00 மணியளவில் சிவபதமடைந்தார்.

அன்னார் மங்களம்மாவின் அன்புக்கணவரும். தாமோதரம்பிள்ளை - கமலாம்பிகையின் அன்பு மகனும், கலாமணிதேவி, நிர்மலாதேவி. காலஞ்சென்ற பகவதி மற்றும் பத்மநாதன் (யாழ். இந்துக்கல்லூரி சங்கீத ஆசிரியர்), கணேஸ்வரி, சிவகுருநாதன் (கொழும்பு), செல்வநாதன் (கனடா), சாந்த சற்குணநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தையா - கனகம்மாவின் மருமகனும், நாகராஜா, செல்வரத்தினம், அருணாசலம், சுலோசினிதேவி, நாகஜோதி, சிவபாக்கியம் ஆகியோரின் மாமனாரும்; உமா, மாலா (பெரியபுலம் ம. வி. ஆசிரியைகள்) ஜெயகிருஸ்ணன், சியாமகிருஸ்ணா, ரமணகிருஸ்ணா, ரோகிணி, காயத்திரி, சுபோசினி, நேசகிருஸ்ணா, நர்மதா, அங்கையற்கண்ணன், தாரணி நயனிதா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று ((19-12-97) வெள்ளிக்கிழமை 3-00மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
பத்மநாதன்
சாந்தசற்குணநாதன்
(மக்கள்)

671/1, கே. கே. எஸ். வீதி,
பூநாறிமரத்தடி,
யாழ்ப்பாணம்.

(51953)

# கண்ணீர் பூக்களை

காணிக்கையாக சமர்பிக்கின்றோம்



அமரர்

## தாமோதரம்பிள்ளை கிருஷ்ணசாமி பத்தர்

எமது சமூகத்தின் வழிகாட்டியாகத் திகழ்ந்த அமரர் தாமோதரம்பிள்ளை கிருஷ்ணசாமி பத்தர்

அவர்களின் மறைவை ஒட்டி ஆழ்ந்த துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் அவரை இழந்து தவிக்கும் சமூகத்தினருக்கும் எமது கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்.

உறவினர், நலன்விரும்பிகள்,
மருமக்கள்.

(51954)

## மதகுகள் திருத்தப்படவில்லை

யாழ்ப்பாணம், டிச. 19

நல்லூர் பிரதேச சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசங்கள் சிலவற்றிலுள்ள மதகுகள், வடிகால்கள் திருத்தப்படாமல் உள்ளன.

இதுகுறித்து பிரதேச சபையுடன் தொடர்பு கொண்ட போது வடிகால்களுள்ளே மிதிவெடி, கண்ணி வெடி அபாயங்கள் உள்ள காரணத்தினால் பிரதேச சபை ஊழியர்கள் அவற்றைத் திருத்தி அமைப்பதில் தயக்கம் காட்டுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## விசேட அடையாள அட்டை

தென்மராட்சி, டிச. 19

பளைப் பிரதேசத்தில் பாதுகாப்பு அரணுக்கு வெளியே வதியும் மக்களுக்கான விசேட அடையாள அட்டைகள் இன்று வெள்ளி காலை 9 00 மணி முதல் பிரதேச செயலகத்தில் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தெரிவித்தார். (இ-117)

## சென்றலைட்ஸ் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 19

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்தக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.0C மணிக்கு யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (இ-3)

## கொக்குவிலில் கொல்களம்

யாழ்ப்பாணம், டிச. 19

நல்லூர் பிரதேச சபையின் 1997 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் கொக்குவில் பகுதியில் கொல்களம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (ஐ'

## பகுதிநேர விரிவுரையாளர் சம்பளம் தாமதம்

யாழ்ப்பாணம், டிச. 19

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப கல்வி நிறுவனத்தின் பகுதி நேர விரிவுரையாளர்களுக்கான சம்பளம் உரிய காலத்தில் வழங்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விரிவுரையாளர்களுக்கான சம்பளம் கொழும்பிலிருந்து வருவதனாலேயே காலதாமதம் ஏற்படுவதாக கூறப்பட்டுள்ளது.

97 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தில் 89 பகுதி நேர விரிவுரையாளர்கள் கடமையாற்றியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)


## காணி, வீடு தேவை

சுண்டிக்குளி அல்லது நல்லூர் பகுதியில் 2 பரப்பு காணியோ அல்லது காணியுடன் வீடோ விலைக்குத் தேவைப்படுகிறது.

தொடர்பு:-
கே.எம்.இராஜேந்திரன்
கணக்காளர்
(இலங்கைச்செஞ்சிலுவைச் சங்க காரியாலயம்)
78, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(51952)

## லிபேட்டி சினிமா

அச்சுவேலி.

30 அடி அகலத் திரையில்

சூரியவம்சம்

நேரம்: 10-30, 2-30

(51893)



## பேராதனைப் பல்கலைக்கழக (வெளிவாரி) விரிவுரைகளுக்கு மாணவர்களைப் பதிவு செய்தல்

## கல்வியாண்டு 98/99

கலை முதற் தேர்வு (G. A. Q.)
விஞ்ஞான முதற் தேர்வு (G. S. Q.)
புள்ளிவிபரவியல்

க. பொ. த. உயர் தரம் 3 பாடங்களில் சித்தியுடன் 180 மொத்தப் புள்ளிகள் பெற்றவர்கள் அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 1997 ஓகஸ்ட் மாதம் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர்பார்த்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்

விண்ணப்ப முடிவுத் திகதி:- 01 - 01 - 98
விரிவுரைகள்:- 04 - 01 - 98 இல் ஆரம்பமாகின்றன.

விவரங்களையும், விண்ணப்பப்படிவத்தினையும் ரூபா 10 செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விவரங்களுக்கு:

உதவிப் பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
73, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(51957)



# Gestetner (கெஸ்ற் எட்னர்)



## றோணியோ இயந்திரங்கள்

மனித சக்தி மூலமும், மின்சார சக்தி மூலமும் இயங்கக்கூடியன

- ★ Printer (அச்சடித்தல்)
- ★ Fax
- ★ Communication (தொலைத்தொடர்பு)
- ★ Copy (கொப்பி)

முதலிய சகல தேவைகளுக்கும் உகந்தது.
முன்கூட்டியே பதிவுசெய்து கொள்வதற்கு நாடவேண்டிய ஸ்தாபனம்:

**A.S. பொன்னம்பலம் & சன்,**
176, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(51947)


# 2-ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 01 — 07 — 1936

உதிர்வு: 19 — 12 — 1995

## அமரர் அ. சி. மரியரத்தினம்

(முன்னாள் காலி மறைமாவட்ட மறை ஆசிரியர்)
(புனித செபஸ்தியார் வீதி, பலாலி, வசாவிளான்)

காலங்கள் பல வந்து
கோலங்கள் காட்டிவிட்டாலும்
காலத்தின் அன்பில் திளைத்த
எம் இதய ஓலங்கள்
என்றும் ஓய்வதில்லை.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இன்று காலை 6 00 மணிக்கு யாழ். பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்னாருக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் கேட்டு நிற்கின்றோம்.

அன்னாரை நினைவு கூரும்
குடும்பத்தினர்

69, சீனிவாசம் வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(51948)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1998 மனித உரிமை ஆண்டு

நியூயோர்க், டிச. 19

1998 ஆம் ஆண்டு மனித உரிமைகள் ஆண்டாகக் கொண்டாடப்படுகிறது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு மனித உரிமை குறித்த உலகப் பிரகடனத் தீர்மானம் ஐ நாவில் நிறைவேறியதைக் குறிக்கும் வகையில் 1998 ஆம் ஆண்டு மனித உரிமைகள் ஆண்டாகக் கடைப் பிடிக்கப்படுகிறது.

''அனைவருக்கும் அனைத்து மனித உரிமைகள்'' என்பதே மனித உரிமைகள் ஆண்டின் முழக்கமாக இருக்கும் என ஐ. நா. தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் குறித்த உலகப் பிரகடனம் நிறைவேறி ஐம்பது ஆண்டுகளான போதிலும் இன்னும் மக்களில் பலர் சிவில், கலாசார, பொருளாதார, அரசியல் மற்றும் சமூக உரிமைகளை முழுமையாகப் பெறாமல்தான் உள்ளனர் என்று மனித உரிமைகளுக்கான ஐ. நா. தூதர் கூறியுள்ளார்.

''மனித உரிமைகள் மதிக்கப்படவில்லையெனில் சர்வதேச அமைதியும், பாதுகாப்பும், சமூக பொருளாதார வளர்ச்சியும் இருக்காது'' என்றும் அவர் தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆண்டை ஒட்டி புதன்கிழமை (டிச. 10) துவங்கி ஓராண்டுக்கு மனித உரிமைகள் குறித்த பல்வேறு கருத்தரங்குகளும் மாநாடுகளும் விழிப்புணர்ச்சி முகாம்களும் நடத்தப்பட உள்ளன. (ஐ)

# முக்கிய 7 கூட்டங்களில் சோனியா பேசுவார்?

புதுடில்லி, டிச. 19

இந்தியாவில் பொதுத் தேர்தல் பிரசாரத்தின் போது நாடு முழுவதும் ஒரு வாரகாலம் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட திருமதி சோனியா காந்தி சம்மதம் தெரிவித்துள்ளதாக காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காங்கிரஸ் தலைவர்கள் இது தொடர்பாக சோனியாவை அடிக்கடி சந்தித்து வற்புறுத்தி வருகின்றனர்.

பெப்ரவரி 10 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை சோனியா இந்தியா முழுவதும் பிரசாரம் செய்யத் திட்டமிட்டுள்ளார். முக்கியமான ஏழு கூட்டங்களில் மட்டும் அவர் உரையாற்றுவார்.

தென்னிந்தியாவில் தமிழ் நாட்டிலும், ஆந்திராவிலும் ஒவ்வொரு கூட்டங்களில் உரையாற்ற அவர் திட்டமிட்டுள்ளார் என்று சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

பெப்ரவரி 18 ஆம் திகதி தமது பிரசாரத்தை முடித்துக் கொண்டு மகன் ராகுவின் திருமண விடயம் தொடர்பாகப் பேசுவதற்கு அவர் லண்டன் செல்கிறார் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

வட மாநிலங்களில் பல இடங்களில் பாரதீய ஜனதாக் கட்சி பிரசாரத்தைத் தொடங்கிவிட்டது. தென் மாநிலங்களில் இந்த முறை எப்படியாவது காலூன்றி விடவேண்டும். என்பதில் அது உறுதியாக உள்ளது. இதை எதிர்த்து முறியடிக்க சோனியாவை பிரசாரத்தில் ஈடுபட வைப்பது தான் காங்கிரஸ் கட்சிக்கு உள்ள ஒரே வழி ஆகும். (ஐ)

# கிழக்கு ஐரோப்பாவில் குளிருக்கு 53 பேர் பலி!

## வீதிகளில் விழுந்து பலர் மரணம்

புக்காரெஸ்ட், டிச. 19

கிழக்கு ஐரோப்பாவை கடுங் குளிர் தாக்கியுள்ளது. வடதுருவத்தில் இருந்து பரவும் இந்தக் குளிர்கால நிலையினால் 53 பேர் பலியாகியுள்ளனர்.

போலந்து, ருமேனியா, பல்கேரியா, ரஷ்யா உக்ரைன் ஆகிய நாடுகளில் இந்த உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளன.

உறைய வைக்கும் கடுங் குளிரினால் ருமேனியத் தலைநகர் புக்காரெஸ்ட்டில் ஏழு பேர் உயிரிழந்தனர். பல்கேரியாவில் நால்வர் பலியாகினர்.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் வீதிகளில் மூவர் குளிரில் உறைந்து உயிரிழந்தனர்.

கருங்கடற் பகுதியில் பனிக்காற்றினால் மின் வயர்கள் அறுந்தன. மின் இயந்திரங்கள், வெப்ப மூட்டிகள் போன்ற அத்தியாவசிய உபகரணங்கள் குளிரால் செயலிழந்தன.

அடுத்த சில வாரங்களில் மேலும் உறை பனி அதிகரிக்கும் என வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# உக்ரைன் விமானம் கிறீஸில் வீழ்ந்தது!

## 70-க்கும் மேற்பட்டோர் பலி!

ஏதென்ஸ், டிச. 19

உக்ரைன் விமான சேவைக்குச் சொந்தமான ஜெட் விமானம் ஒன்று கிறீஸின் வட பகுதி கரையோர நகரான சிலோனிக்காவில் வீழ்ந்து நொறுங்கியதில் 70க்கும்மேற்பட்ட பயணிகள்பலியாகியதாக அஞ்சப்படுகிறது.

கிறீஸின் வடபகுதி கரையோர நகரான சிலோனிக்காவில் தரையிறங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னர் இந்த விமானம் ரடார் திரைகளில் இருந்து மறைந்தது. பின்னர் விமானம் காணாமற் போனதாக அறிவிக்கப்பட்டது.

தீப்பிழம்பு ஒன்று மலைப்பகுதியில் தென்பட்டதைத் தொடர்ந்து பெரும் வெடி ஓசை கேட்டதாக உள்ளூர் கிராமவாசிகள் தெரிவித்ததை அடுத்து விமானத்தைத் தேடும் பணி முழு வீச்சில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஹெலிகள், விமானங்களின் உதவியுடன் படையினரும் உள்ளூர் விவசாயிகளும் புதன்கிழமை இரவு முழுவதும் விமானத்தைத் தேடுவதில் ஈடுபட்டிருந்ததாக ஏதென்ஸில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மோசமான காலநிலை காரணமாக விமானம் வீழ்ந்து நொறுங்கியதாக அஞ்சப்படுகிறது. இந்த விபத்து தொடர்பான மேலதிக விவரங்கள் நேற்று நண்பகல் இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (ஐ)

# வாஜ்பேயின் பாடல்கள்

முன்னாள் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பேயின் எட்டுப் பாடல்கள் அடங்கிய ஒலி நாடா ஒன்று இசைப் பிரியர்களுக்குப் புத்தாண்டுப் பரிசாகக் கிடைக்கவுள்ளது.

இப்பாடல்களைப் பிரபல பாடகி பத்மஜா ஜோக் லேகர் இசையமைத்துப்பாடியுள்ளார்.

வாஜ்பேயின் பாடல்களைப் பாட நான் மிகவும் விரும்புகிறேன். ஏனெனில் அவர் மிகச் சிறந்த கவிஞர்.

இந்த ஒலி நாடாவுக்கும் வரவிருக்கும் தேர்தலுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. தேர்தலுக்கு முன்னதாகவே இந்த ஒலி நாடா சந்தையில் கிடைக்குமா என்பது எனக்குத் தெரியாது என்று பத்மஜா தெரிவித்தார். (ஐ)

# விலகி இருக்க நரசிம்மராவ் முடிவு



புதுடில்லி, டிச. 19

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட முன்னாள் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் விரும்பவில்லை என அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

உண்மையில் தேர்தலில் போட்டியிட ஆர்வமில்லாமல் அவர் இந்த முடிவை எடுக்கவில்லை என்றும் —

இக்கட்டான நிலையை காங்கிரஸ் தலைமைக்கு ஏற்படுத்தாமல் இருக்கவே இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

கட்சித்தலைவர் சீதாராம்கேசரி தனிப்பட்ட முறையில் தன்னை அணுகி இதுபற்றிப் பேசாதவரை தமக்கு அனுமதி வேண்டுமென ராவ் கோரமாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐ. எம். எம். வழக்கு, செயின்ட் கிட்ஸ் மோசடி வழக்கு, லகுபாய் பதக் மோசடி வழக்கு போன்றவற்றில் ராவ் மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருப்பது தெரிந்ததே. இந் நிலையில் தேர்தலில் போட்டியிட அவருக்கு ரிக்கெற் வழங்கினால் கட்சியின் கௌரவம் பாதிக்கப்படும் என காங்கிரஸ் கருதுகிறது. இதனால் தேர்தலில் போட்டியிட அவருக்கு அனுமதி வழங்குவதில்லை என்று காங்கிரஸ் தலைமையும், செயற்குழுவும் முடிவு எடுக்கலாம்.

இத்தகைய இக்கட்டை தவிர்க்கவே போட்டியிடுவதில் இருந்து விலகி இருக்க ராவ் முடிவு எடுத்ததாகக் கூறப்படுகிறது. (ஐ)

# உலக அரங்கில்

## உள்ளூர் கிராமவாசிகளால் வெளிநாட்டினர் பணயம்!

### நைஜீரியாவில் ஏற்பட்ட பரபரப்பு

நைகர், டிச. 19

நைஜீரியாவின் நைகர் துறைமுகப் படுகையில் அமெரிக்க எண்ணெய் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான வெளிநாட்டவர்கள் உட்படப் பலர் அப்பகுதி கிராமவாசிகளால் பணயக் கைதிகளாக்கப்பட்டனர்.

சிறு குடா ஒன்றில் தரித்து நின்ற படகுவீடு ஒன்றில் தங்கியிருந்த சமயம் இவர்கள் அனைவரும் பணயக்கைதிகளாக்கப்பட்டனர்.

ஆஸ்திரேலிய பிரஜை ஒருவர், அமெரிக்கப் பிரஜை ஒருவர், பிரிட்டிஷ் பிரஜைகள் இருவர் உட்பட பல நைஜீரிய நாட்டவர்களும் இவர்களில் அடங்குவர்.

கத்திகள், துப்பாக்கிகள் சகிதம் பல கிராமவாசிகள் கடந்த சில நாள்களாக இப் படகுவீட்டைச் சுற்றிவளைத்திருந்தனர்.

அவர்களின் பிடியில் இருந்து அமெரிக்கப் பிரஜையான எண்ணெய் நிறுவன ஊழியர் ஒருவாறு தப்பிவிட்டார்.

இவர்களைப் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த கிராமவாசிகள் அந்த எண்ணெய் நிறுவனத்திடம் இருந்து பணம் பெற்றுவந்தனர். அவர்களில் சிலர் அந்த நிறுவனத்தின் பணியாளர்களாவர்.

பணயக்கைதிகளை விடுவிக்கும் முயற்சியாக அவர்களுடன் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்றது. (ஐ)

# இந்தோனேசிய ராணுவம் எச்சரிக்கை

ஜகார்த்தா, டிச. 19

இந்தோனேசிய அதிபர் சுஹார்ட்டோவின் உடல் நலமின்மை மற்றும் அதனால் நாட்டில் ஏற்படக் கூடிய அரசியல் ஸ்திரமின்மை பற்றிய வதந்திகளைப் பரப்புவது நிறுத்தப்படாவிட்டால் அதில் தலையிடப் போவதாக இராணுவம் எச்சரித்துள்ளது.

அந்நிய செலாவணி மதிப்புச் சரிவினால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இராணுவம் முற்படும் என்று இராணுவத்தின் தலைவர் கூறியுள்ளார்.

அதிபர் சுஹார்ட்டோ வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பிய பின்னர் அவரை ஓய்வு எடுத்துக் கொள்ளுமாறு டாக்டர்கள் கூறியதை அடுத்து அவரது உடல் நிலை தொடர்பாக வதந்திகள் கிளம்பியுள்ளன. (ஐ)

# சுறாக்களை பாதுகாக்கத் திட்டம்

நீந்துபவர்களைத் தாக்குவதாக அஞ்சப்படும் பெரிய வெள்ளைச் சுறாக்களை அழிந்து வரும் கடல் உயிரினம் என்று ஆஸ்திரேலிய அரசு பிரகடனம் செய்து அவை பாதுகாக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

சுறாக்களில் இருந்து பெறப்படும் பொருள்கள் 'சூப்' தயாரிக்கவும், சுகாதார மற்றும் அழகு சாதனங்களுக்கும் பயன் படுத்தப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவில் இந்தப் பெரிய சுறாமீன் ஆண்டுக்கு சராசரி ஒருவரை மட்டுமே கொல்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# வோல் டிஸ்னி தயாரிப்பாளர் காலமானார்

வோல் டிஸ்னி கார்ட்டூன் திரைப்படத் தயாரிப்பாளரான வில்லியம் டிஸ்னி (வயது 98) காலமானார்.

வோல் டிஸ்னி நிறுவனம் லொஸ் ஏஞ்சல்ஸில் இதனை அறிவித்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சொந்தப் பாவனையில் உள்ள HONDA C90 மோட்டார் சைக்கிள் மற்றும் HONDA EGK 600 வாறஸ் GENERATOR JAPAN விற்பனைக்குண்டு. தொடர்பு: கிருபா விடியோ, அல்லாரை வடக்கு, மீசாலை.
[51899]

2,500 பவுண் மார்க் தட்டை ஓடுகளும்பனை மரம், வனைமரம், தீராந்திகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: பாலச்சந்திரன், ஜீன்வெல்டிங் அருகில், ஆலடிச்சந்தி, மானிப்பாய்.
[சி/2355]

M D HONDA மோட்டார் சைக்கிளும், சலரோக நோயாளிக்கான இன்சுலின் மருந்துகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 124, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (I C.R.C -க்கு அருகில்).
[51922]

நல்ல நிலையிலுள்ள L.M.L T 5, ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; எம். கே. ஜீவகதாஸ், லிங் லெண்டிங் லைபிரறி, 41, தபாலக வீதி, சாவகச்சேரி.
[51917]

## தவறிவிட்டன

யோசவ் றெஜினா என்பவரது 517862754X இலக்க தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும், சிறுதொகைப் பணமும் 13-12-97 அன்று யாழ். பஸ்நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் S. R. கந்தசாமி, 64, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும்.
[51920]

## ஆங்கில வகுப்புகள்

ஆண்டு 6 முதல் G C.E. [O/L] வரை ஆங்கில வகுப்புகள் நடை பெறுகின்றன. தொடர்பு: இல. 112, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
[15855]

# ஓராண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 19 — 04 — 1977

ஆண்டவன் அடியில்: 30 — 12 — 1996

## செல்வன் அருணாசலம் சிவச்செல்வன்

திதி: 19-12-1997

நீ பிரிந்து சென்றது ஓராண்டு
நிதம் எம் விழியில் கண்ணீர்க் கோடு
எம் வானின் நீ என்றும் தேயா நிலவு
எமைவிட்டு அகலாது உன் நினைவு.

என்றும் உன் பிரிவால் துயருறும்!
- குடும்பத்தினர்

காளிகோயில் வீதி,
கொடிகாமம்

(51886)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு: 30 — 04 — 1961

அந்நியன் அழிப்பு: 19 — 12 — 1987

## முருகையா சபேசன் (அப்பூச்சி)

தாய்க்குத் தலைமகனே! தரம் விரும்பும்
குல விளக்கே! நம் குடும்பத் திரு விளக்கே!
ஒளி விளக்காய் நீ இருப்பாய் என்றிருக்க
உனைப்பரிதாபமாய் இழந்து விட்டோமே ஐயோ!

தாய், தம்பிமார், தங்கை,
அத்தான், மச்சாள்மார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

(51918)

# நகை திருடியவருக்கு 5 ஆயிரம் ரூபா பிணை

85 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடியதாக குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவரை 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல பதில் நீதிவான் அனுமதித்தார்.

யாழ். முஸ்லீம் வட்டாரத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நகைகளையே சு. சின்னத்தம்பி என்றழைக்கப்படும் நபர் திருடியதாக குற்றஞ் சாட்டப்பட்டு நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். இவர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி எஸ். என. விஸ்வலிங்கம் இவரை பிணையில் விடுதலை செய்யுமாறு யாதிட்டார்.

பதில் நீதிவான் க. கேசவன் சந்தேக நபரை 5 ஆயிரம் ரூபா பிணையில்செல்ல அனுமதித்துடன் வழக்கை எதிர்வரும் ஜனவரி 26 ஆம் திகதிவரை ஒத்திவைத்தார்
(ஐ-9)

# மூன்றாவது பிறந்தநாள் நினைவலைகள்



தோற்றம்: 19 — 12 — 1994

மறைவு: 16 — 07 — 1996

## செல்வி ஸ்ரீபாலன் லேனசிகா

அழகான உன் முக ஒளிதான் மங்கியதோ
உன் அழகு வாய் தான் மண்ணோடு மண்ணானதோ
கவர்ச்சியான உன் கண்கள் தான் கலையழகு
இழந்ததோ

உன் சிட்டுக்குருவி மூக்குத்தான் அழகிழந்து
சின்னாபின்னமானதோ

வனப்பு கொண்ட உன் மேனியழகுதான்
உருவம் மாறியதோ

உந்தன் பொன்வண்ண நிறம்தான் கன்னங் கரிய
தாகியதோ

கொடிய நோய்தான் உன் பொலிவைச் சூறையாடி
உன்னையும் காலனுக்கு இரையாக்கியதோ
நித்தமும் உன் நினைவுகளில் மிதக்கின்றேன்
கணந்தோறும் உந்தன் கற்பனையில் கரைகின்றேன்
உன்னை மீண்டும் காணமாட்டேனா என
கலங்குகின்றேன்

அதனால் நீ இருக்கும் விண்ணுலகம் வருவோமா
என்று கூட நினைக்கின்றேன்.
மீண்டும் நீ என் பேர் சொல்ல இங்கு வந்து பிறப்பாய்
என்ற நம்பிக்கையில் இன்னும் இவ்வுலகில்
வாழ்கின்றேன்.

உன் பண்ணுலக வரவை எதிர்பார்த்துக்
காத்திருக்கும்:

உரிமையுள்ள உறவு
P. ஸ்ரீபாலன்

சித்தியம் புளியடி,
தெல்லிப்பழை கிழக்கு

(51925)


BASF

விவசாயிகளே இதோ!
பி(F)ன் பொஸ் 40

நெல் இலைமடிச்சுக்கட்டி ★ இலை சுருட்டிப்புழு
★ சந்துகுத்தி ★ இலையரிபுழுக்களுக்கும்
★ உருளைக்கிழங்குச் செய்கையில் கறையான்,
எறும்பு போன்றனவற்றைக் கட்டுப்படுத்தவும்
அதிசிறந்தது

பின்பொஸ்

மற்றுமொரு கிருமிநாசனி

டயசின்

பின்லேம் நிறுவனத்தினால் விநியோகிக்கப்படுகின்றது.
★விவசாய இரசாயன விற்பனையாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

BASF Finlay (pvt.) Ltd.
186 Vauxhall Street, Colombo - 2

(பீடை கொல்லிகள் அபாயகரமானவை அவதானமாகப் பாவிக்கவும்)

(சி/2358)


# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 29 — 04 — 1969

ஆண்டவன் அடியில்: 19 — 12 — 1987

## மரியநாயகம் ஈற்றஸ் செந்தில்குமரன்

முத்தாக அன்னை வயிற்றுதித்த அருங்குமரா
சொத்தாக எம் குடும்பத்தில் வந்த செந்தில்குமரா
தத்தாக வந்ததொரு துர் மரணம் தன்னால்
வித்தாக இல்லாமல் போய் விட்டாய் எம் குமரா
சுத்தமான மனதுடன் நீ வாழ்ந்தாலும் விரைவில்
செத்தாக வேண்டுமென்பதுன் தலை விதி தானோ?
பத்தாண்டு சென்றாலும் உனை நாம் மறவோம்
நித்தமும் நினைந்திங்கு இறைபதம் வேண்டுவோம்.

என்றும் உனை மறவாமல் நினைவு கூரும்!
பெற்றோர், சகோதரன்,
உற்றார், உறவினர்.

எழிலகம்,
இல்லாலை.

(51862)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் வந்தன

குருநகர், டிச. 19

வடபகுதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு கப்பல் மூலம் ரூபா 30 லட்சம் பெறுமதியான மீன் பிடி உபகரணங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

மீன்பிடி வலைகள், நூல், தூண்டில், சாயம், மிதப்புகள் ஆகியவை இவற்றில் அடங்கும்.

இதில் ஒரு தொகுதிப் பொருள்கள் நேற்று முன்தினம் யாழ். பிரதான வீதியில் இயங்கும் சமாசப் பணிமனைக்கு லொறி மூலம் கொண்டு வரப்பட்டன.

அகதிகளுக்கான ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் நுண் கருத்திட்டத்தின் கீழ் இப் பொருள்களில் ஒரு தொகுதி மீனவர்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட உள்ளது. மிகுதிப் பொருள்கள் மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மீனவர்களுக்கு நியாய விலையில் விற்பனை செய்யப்பட உள்ளதாக சமாசத் தலைவர் கி. தவரட்ணம் தெரிவித்தார். (ஐ-51)

## குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின்

# தவறான மொழி பெயர்ப்பால் தமிழ் இளைஞருக்கு நேர்ந்தகதி

கொழும்பு, டிச. 19

வாக்குமூலத்தைப் பதிவு செய்வதில் இடம்பெற்ற தவறு காரணமாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

எதிரியிடம் இருந்து வாக்குமூலத்தைப் பதிவு செய்தவருக்கு தமிழ் தெரியாது என்பது நீதிமன்றில் நிரூபிக்கப்பட்டதை அடுத்தே இந்த இளைஞர் விடுதலை செய்யப்பட்டார்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த சீனித்தம்பி ரவீந்திரன் (வயது 21) என்ற இளைஞரே விடுவிக்கப்பட்டவர்.

1—1—1994 - க்கும் 30—8—1996 -க்கும் இடைப்பட்ட காலத்தில் அக்கரைப்பற்றில் அதிரடிப்படையினரின் நடமாட்டம் பற்றி புலிகளுக்கு தகவல் கொடுத்ததாக இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டு இருந்தது.

உதவி பொலீஸ் அத்தியட்சர் மத்தும பண்டாரவுக்கு எதிரி அளித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை மட்டுமே தடயப் பொருளாகக் கொண்டு இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது.

சாட்சிகளாக உதவிப் பொலீஸ் அத்தியட்சர் மத்தும பண்டாரவும் மற்றும் 3 பொலீஸாரும் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பதிவு செய்ய மொழிபெயர்ப்பிற்கு உதவிய பொலீஸ் சார்ஜன்ட் சித்திக் சாட்சியமளித்தார். இவரை எதிரி தரப்பு சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தமிழில் குறுக்கு விசாரணை சய்தார்.

P. T. A. என்றால் (பயங்கரவாத தடைச் சட்டம்) என்ன?

பயங்கரவாதிகள் விலக்கும் சட்டம். Confession (குற்ற ஒப்புதல் வாக்குமூலம்) என்றால் என்ன?

சுயவிருப்பத்துடனும் நியாயத்திற்குட்பட்டும் அளிக்கும் வாக்குமூலம்.

வாக்குமூலம் வாய் முறைப்பாடு என்பவற்றிற்கு தமிழ் என்ன என்று சாட்சியிடம் சிங்களத்தில் கேட்டபோது சாட்சி பதில் சொல்லவில்லை.

பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் ஒரு பகுதியை சிங்களத்தில் வாசித்து தமிழில் மொழி பெயர்க்கக் கேட்ட போது சாட்சி தடுமாறினார்.

எதிரியின் முதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்ய மொழி பெயர்த்தவரும் சாட்சியே. இவருக்கு உண்மையில் தமிழ் தெரியாது. எதிரி கூறியதைத்தானா மொழி பெயர்த்தார் என்பது சந்தேகத்திற்கு இடமளிக்கிறது. எனவே, குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் நீதிபதியைக் கேட்டார்.

இதனை ஏற்ற நீதிபதி எதிரியை விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

அரசு தரப்பில் சட்டவாதி திருமதி அனுஷா சமரநாயக்க வழக்கை நடத்தினார். (ஐ-10)

# கூட்டுறவு ஊழியருக்கு புதிய சம்பளம் ஜனவரியில் கிடைக்கும்

அரியாலை, டிச. 19

யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு ஊழியர்களுக்கான புதிய சம்பளத் திட்டம் தொடர்பான சுற்றறிக்கையை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அமுல் செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

01-7 97 தொடக்கம் இந்த சம்பள உயர்வின் நிலுவையையும் ஊழியர்களுக்கு வழங்குவதற்கு சங்கங்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

இதேசமயம் யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வு சுற்றறிக்கையை உடனடியாக அமுல்படுத்துவதற்கான ஆளணிக் கூட்டம் சங்கத் தலைவர் சி. வீ. கே. சிவஞானம் தலைமையில் கூடியது.

இக் கூட்டத்தில் சம்பள உயர்வை அமுல்படுத்துவது, சம்பள உயர்வின் நிலுவைக் கொடுப்பனவை வழங்குவது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. (ஐ 17)

## உடுவில் கோட்ட கலந்துரையாடல்

உடுவில் கல்விக்கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு 21 ஆம் திகதி இக் கலந்துரையாடல் நடைபெற மாட்டாது என உடுவில் கோட்டக்கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# இரண்டாவது தொகுதி வினாத்தாள்கள் வந்தன

குருநகர், டிச. 19

தற்போது நடைபெற்று வரும் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குரிய இரண்டாம் கட்ட வினாத்தாள்கள் கடந்த திங்கட்கிழமை விமானம் மூலம் எடுத்துவரப்பட்டன.

இதுவரை நடைபெற்ற பாடங்களின் விடைத்தாள்கள் திருத்தும் பணிக்காக கப்பல் மூலம் திருகோணமலைக்கு விரைவில் அனுப்பி வைக்கப்பட உள்ளன.

கிழக்குப்பகுதி விடைத்தாள்கள் யாழ்ப்பாணத்தில் வைத்து திருத்தப்படுவதற்காக இம் மாதம் 23 ஆம் திகதி கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட உள்ளன. (ஐ 51)

## மணிமண்டப திருப்பணி ஆரம்பம்

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானத்தில்பஞ்ச தள இராஜ கோபுரமணி மண்டபத்துக்கான திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம், சுன்னாகம் ப.நோ. கூ. சங்கத் தலைவர் சி. குமாரவேலு, கிராமசேவகர் செ. வைத்தியநாதர், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர் ஐ மனோகரன், ஓய்வு பெற்ற அதிபர்களான திருமதி ம. திருச்சிற்றம்பலம் சோ. சோமசேகரம் ஆகியோர் திருப்பணி வேலைகளை ஆரம்பித்துவைத்தனர்.

ஆலய பிரதமகுரு ''சிவாகம கலாநிதி'' சிவஸ்ரீ. நா. சர்வேஸ்வரக் குருக்கள், மாவை ஆதீன குரு சிவஸ்ரீ து சண்முகநாதக் குருக்கள் ஆகியோர் திருப்பணி வேலைகளுக்கான ஆரம்ப பூசைகளை நடத்தி வைத்தனர்.

பெரும் எண்ணிக்கையான சிவனடியார்கள்செங்கற்களை எடுத்துக் கொடுத்து திருப்பணி வேலைகளைஆரம்பித்து வைத்தனர்.

மகாகும்பாபிஷேகம் அடுத்த ஆண்டு மேமாதம் முதலாம் திகதி நடைபெற உள்ளது. (ஐ-152)

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல்- 1998

20—11—97 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரமாகிய மேற்படி விளம்பரத்தின் பிரகாரம் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான கால எல்லை **24—12—1997** ஆம் திகதி புதன்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 17. 12. 1997.

(சி/ 2403)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மானிடத் தாயின் மடியில்: 11 — 01 — 1984



கோனிடை மயிற் சேவடியில்: 07 — 11 — 1997

## செல்வன் கனகேந்திரன் கஜந்தன்

(யா/ தொண்டமானாறு · வீரகத்தி மகாவித்தியாலய 9 ஆம் ஆண்டு மாணவன்)

எங்கள் மகனின் பிரிவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து பல்வேறு வழிகளில் உதவி செய்தோருக்கும், கடித மூலமும், நேரிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றிகள். இதே போன்று 21—12—97 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற இருக்கும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம். நேரில் வந்து தனிப்பட்ட அழைப்புக்கள் தெரிவிக்க முடியாத எமது நிலைமையைப் புரிந்து அவரில் அன்புள்ளம் கொண்ட அனைவரையும் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

பெற்றோர், சகோதரர்கள்,
பேர்த்திமார், சித்தப்பா, சித்தி,
மாமன், மாமி.

செல்வச்சந்நிதி கோயில்,
தொண்டமானாறு.

(51940)

Bayer BAYER

உருளைக்கிழங்குச் செய்கையாளர்களே!

உங்கள் உருளைக்கிழங்குச் செய்கையைப்பாதிக்கும் நோய், பீடைகளைக் கட்டுப்படுத்த

"ஜேர்மானிய பாயர்"

நிறுவனத்தின் கீழ் வரும் தரமான விவசாய இரசாயனங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுங்கள்.

★ குரேட்டர் 3 % ஜி — கொறவணைன் புழு, நெருப்பெறும்பு மற்றும் வெட்டுப் புழுக்கள்
★ பைசிட் ஈசி 50 % — பனிப்பூச்சி
★ மெற்றாசிஸ் ரொக்ஸ் ஆர் — அழுக்கணவன்
★ டிப்ரரெக்ஸ் எல். சி 50 % — இலைச்சுரங்க மறுப்பி, எபிலக்னா வண்டு
★ அன்றகோல் டபிள்யூ பி 70 % — பிற்கூற்று வெளிறல் முற்கூற்று வெளிறல்
★ மொறஸ்ரான் டபிள்யூ பி 25 % சிற்றுண்ணி

தரமான ''பாயர்'' இரசாயனங்களையே பாவியுங்கள்.

ஹேக்கெம் லிமிட்டெட்
25, பொஸ்ரர் லேன்,
கொழும்பு 10

(பீடை நாசினிகள் அபாயகரமானவை அவதானமாகக் கையாளவும்)

(51934)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NURSERY CLASS - '98

பாலர் வகுப்பு விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களால்

**ஜனவரி 05 இல் ஆரம்பம்**

ஆண்டு 03. 04. 05 (மாலை நேர வகுப்புக்கள்.

**Dec. 20 இல் ஆரம்பம்**

பெயர்கள் உடன் பதிந்து
உங்கள் இடங்களை உறுதிப்படுத்துங்கள்.

ESTD:-1973 REGD:-No J/7993
The Express Institute - அதிபர்
IRUPALAI - KOPAY.

(51927)


## குருநகரில் ஒளி விழா

குருநகர், டிச.19

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியின் ஒளிவிழா, இம் மாதம் 26 ஆம் திகதி பி.ப. 5.30 மணிக்கு குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியின் கலையரங்கில் நடைபெற உள்ளது.

சிறப்பு விருந்தினராக குருநகர் பங்குத் தந்தை அருட்திரு. பொனிபாஸ் கலந்து கொள்வார். நாடகமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

(ஐ-51)

## செஞ்சிலுவைக்கு மின்பிறப்பாக்கி

நல்லூர், டிச. 19

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்கு புதிய மின் பிறப்பாக்கி ஒன்றை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வழங்கியுள்ளது.

(ஐ-103)

## யாழ். ப. நோ. கூ. சங்க கிளை நள்ளிரவில் உடைத்து திருட்டு


யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளாந்தெரு கிளை மீது திருடர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இக் கிளையின் முன்பக்க கதவை உடைத்து கிளைக்குள் இருந்த இடம்பெயர்ந்தோருக்கான உணவுப் பொருள்கள் உட்பட மற்றும் பல பொருள்கள் களவாடப் பட்டுள்ளன.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக பொலீசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 31 — 01 — 1926

மறைவு: 19 — 11 — 1997

### அமரர் கணபதிப்பிள்ளை மாணிக்கம்

(ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர்)

எங்கள் வீட்டில் சுடர்விட்டு
எரிந்த விளக்கு அணைந்ததுவே
திங்களொன்று ஆனதையா
சென்ற இடமோ தெரியவில்லை
தோற்று விட்டீரே காலனிடம்.

19 — 12 — 1997 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை களிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

குடும்பத்தினர்.

புளியடி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(51874)

## தாதி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் வைத்திய சாலைக்குத் தாதி தேவை. பழக விரும்புவோரும் தபால் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

N. நவக்குமாரன்
68/ 2, இராசாவின்
தோட்டம் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(51938)

## ஆசிரியர் தேவை

பாலர் நிலையமொன்றிற்கு 'மொன்ரிசோரி' பயிற்சி பெற்ற பெண்கள் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்போர் விரும்பத்தக்கது. சனியும் ஞாயிறும் நேரில் தொடர்பு கொள்க.

213, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(51926)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்: 10 — 04 — 1948

தேக வியோகம்: 19 — 12 — 1994

### பிரம்மஸ்ரீ தியாகராஜ ஐயர் இலட்சுமிகாந்தம் ஐயர்

திதி: 1998 - 01 - 14

எங்கள் இனிய தந்தையே!
ஆண்டு மூன்றானாலும்
எங்களை முன்னின்று வழிநடத்துகின்றீர்கள்.

என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
பேரன்மார்:- கபிலன், கோபிகன்,
பேர்த்தி:- ஜனசோபினி.

சிவானந்தகிரி,
பாங்லேன், சுன்னாகம்.

(51864)

## பத்தாம் மாதம் நெஞ்சை விட்டு நீங்காத நினைவலைகள்

அன்னையின் மடியில்: | | பயணத்தின் பாதியில்:
--- | --- | ---
12 - 11 - 1952 | திருமதி ம. நீலாம்பிகை | 19
29 - 04 - 1972 | செல்வி ம. மைதிலி | —
10 - 06 - 1973 | செல்வி ம. மஞ்சுளா | 02
08 - 01 - 1975 | செல்வி ம. மாலதி | —
22 - 10 - 1984 | செல்வி ம. மேனகா | 1997

கண்ணீர்க் கடலில் நாம் மூழ்க - எமை
கார்கடல் தான் பிரித்ததையோ!
பல கனவுகளோடு அன்று பயணமானீர்கள்
கொடிய கடல் உங்கள் உயிரை எடுத்ததேனோ?
அஞ்சுகத்தை தந்த அன்னையும் எங்கே
மஞ்சு மாலா மைதிலி அக்காவும் எங்கே
பஞ்சு மனம் கொண்ட தங்கை மேனகா எங்கே
குஞ்சுகளைப் பிரிந்து நீரும் சென்றது எங்கே
வந்த எமன் தந்த துயர் கொஞ்சமுமில்லை
வாடி நாமும் வதங்குகின்றோம் ஆறுதல் இல்லை
கண்ணீர்க் கடலில் எம்மிருவரையும் தவிக்கவிட்டு
கரிய கடல் மடியில் நீவிரும் துயில்வதேனோ?
பத்துமாதம் ஆகினாலும் பாசம் மாறுமோ
நித்தம் நாமும் படுகின்ற துயர்தான் ஆறுமோ
பாசப்பறவைகளே ஒரு தடவை உங்கள்
நேசமுகம் காட்டீரோ! காட்டீரோ!

உங்கள் பிரிவால் துயருறும்:
ம. ராகவன், ம. ரமணன்.

செங்குந்த வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

(51937)

## சபிண்டீகரண அழைப்பு



### அமரர் சின்னத்தம்பி சரவணமுத்து

(ஆலய பிரசாரகர்)

பிறப்பு: 14- 12- 1917

இறப்பு: 20- 11- 1997

அன்புடையீர்!

எங்கள் குடும்பத்தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளும், வீட்டுக்கிரியைகளும் 20-12-1997 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்பர்கள், அடியார்கள், உறவினர்கள் பங்கேற்றுச் சிறப்பிக்குமாறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறும் மிகவும் பணிவாகவும், அன்பாகவும் வேண்டுதல் செய்கின்றோம்.

அன்புடன்:
திருமதி விசாலாட்சி சரவணமுத்துவும்,
குடும்பத்தினரும்.

''குமாரபுரி''
கைதடி வடக்கு,
கைதடி.

(51910)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகங்களை மேம்படுத்த அபிவிருத்தி சபை அமைப்பு

நல்லூர், டிச. 19

பொதுமக்களிடையே குறிப்பாக இளைய தலைமுறையினரிடையே வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தவும்— நகரில் உள்ள அனைத்து நூலகங்களின் சேவையை மேம்படுத்தவும் நூலக அபிவிருத்திச் சபை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இச் சபையில் யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம், தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி ஜெபநேசன், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் உட்பட பல கல்விமான்களும், வர்த்தகப் பிரமுகர்களும் அடங்கிய 17பேர் உறுப்பினர்களாகப் பணியாற்றுகள்.

யாழ். மக்களின் கல்வித் தேவையை பூரணப்படுத்தும் வகையில் சபை செயற்படும். என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-103)

## விடுமுறை நாள்களிலும் கமநல நிலையங்கள் இயங்கும்

காலபோக நெற்செய்கையை முன்னிட்டும், விவசாய செய்கையை முன்னிட்டும் விவசாயிகள் தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வசதியாக யாழ். குடா நாட்டிலுள்ள கமநலச் சேவைக் கேந்திர நிலையங்கள் பொது விடுமுறை நாள்களிலும், சனிக்கிழமைகளிலும் இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலியிலுள்ள யாழ். மாவட்ட கமநல உள்ளீடுகள் விற்பனை நிலையமும் விவசாயிகள் நலன் கருதி மேற்படி விடுமுறை தினங்களில் இயங்கி வருவதாக யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

(ஐ-135)

## யாழ். ப.நோ.கூ. சங்கத்தின் எண்ணெய் விநியோகம் பாதிப்பு

அரியாலை டிச. 19

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மண்ணெண்ணெய் கையிருப்பு முடிவடைந்துள்ளது.

இதனால் சங்கக் கிளைகளுக்கு விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது விநியோகிக்கப்படும் ஆறு லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகத்திற்கு குறைந்தது ஒரு லட்சத்து 20 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய் தேவைப்படுவதாகவும் ஆனால் 72 ஆயிரத்து 600 லீற்றர் மண்ணெண்ணையே இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சங்கத்திற்கு வழங்கியிருப்பதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆறு லீற்றர் மண்ணெண்ணெயை மக்களுக்கு முழுமையாக வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை சங்கத்தின் ஸ்ரான்லி வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையக் களஞ்சியத்திற்கு மண்ணெண்ணெயைக்கொண்டுவந்து தருவிப்பதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மறுத்து வருவதாலும்,

முற்றவெளியில் உள்ள சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெயைத் தருவித்து கிளைகளுக்கு சீராக வழங்குவதற்கான போதிய வசதிகள் இல்லாமையினாலும் சங்கத்தின் மண்ணெண்ணெய் விநியோகம் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக சங்க வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

[ஐ-17]

## மட்டக்களப்பில் வெள்ள அபாயம்

மட்டக்களப்பு, டிச. 18

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து 3 நாள்களாகப் பெய்துவரும் பருவ மழை காரணமாகத் தாழ்ந்த பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 66.3 மி.மீ. மழை அம்மாவட்டத்தில் பெய்துள்ளதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.

ஏறாவூரில் வீடு இடிந்து இரு குழந்தைகள் பலியாகி உள்ளனர்.

(இ-21)

## பனம் கைப்பணிப் பொருள் உற்பத்திப் போட்டி

யாழ்ப்பாணம், டிச. 19

பனம் கைப்பணி உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும், பனம் கைப்பணிப் பொருள்களின் உபயோகத்தையும், ஏற்றுமதியையும் மேம்படுத்தும் நோக்குடனும் பனை அபிவிருத்திச் சபையினர் அகில இலங்கை ரீதியான பனங் கைப்பணிப் பொருள்களுக்கான உற்பத்திப்போட்டி ஒன்றினை நடத்தவுள்ளனர்.

அகில இலங்கை ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் நடத்தப்படும் மேற்படி போட்டிகள் நான்கு பிரிவுகளைக் கொண்டிருக்கும். பனையின் பல்வேறு கூறுகளான ஓலை, மரம், தும்பு, நார் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே தனித்தனிப் போட்டிக்குரிய பொருள்கள் உருவாக்கப்படல்வேண்டும்.

ஒவ்வொரு பிரிவிலும் பங்குபற்றி வெற்றி பெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் மாவட்ட ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் வழங்கப்படும்.

போட்டியாளர் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களையும் சமர்ப்பிக்கலாம். அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன் போட்டிக்குரிய பொருள்கள் யாவும் 53 கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் பொதுமுகாமையாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படல்வேண்டும்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை பனை அபிவிருத்திச் சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(ஐ-7)

## கசிப்பு வைத்திருந்த இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், டிச. 19

பருத்தித்துறையில் கசிப்பு விற்பனை செய்த ஒருவருக்கும் கசிப்பு வைத்திருந்த ஒருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவர்களிடம் இருந்த கசிப்பைப் பறிமுதல் செய்து இவர்களைக் கைது செய்த பருத்தித்துறைப் பொலீஸார் இவர்களை நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவர்களது வழக்கை விசாரித்த நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் இவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

அவர்கள் அபராதப் பணத்தைச் செலுத்தாத பட்சத்தில் இவர்களுக்கு ஆறு மாதம் சிறைத் தண்டனை வழங்கப்படும் எனவும் அவர் தீர்ப்பு வழங்கினார்.

(இ-9)

## ஊர்காவற்றுறை எரிபொருள் நிலையம்

நெடுந்தீவு, டிச. 19

ஊர்காவற்றுறை எரிபொருள் நிரப்பு நிலையம் விரைவில் திறக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். இளைமுகாமையாளர் எஸ். சிவஞானம் மேற்கொண்டுள்ளார்.

(ஐ-117)

# யாழ். மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சி அடையக் காரணம் என்ன?

## காலங்காலமாக காத்துவந்த பாரம்பரியத்தில் பின்னடைவு

கண்ணீராலும், செந்நீராலும், கடும் உழைப்பினாலும் காலங்காலமாக காத்துவந்த யாழ்ப்பாணத்து மாணவர்களின் கல்வித்தரம் அண்மைக் காலத்தில் பின்தள்ளப்பட்டுள்ளது. பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தின் கல்வித்தரம் எட்டாவது இடத்தில் இருப்பதாக கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்தை எட்டிப் பிடிக்க முடியுமா? அதனைக் காப்பாற்ற முடியுமா? மீண்டும் பழைய நிலைக்கு அது திரும்புமா என்ற கேள்விகள் எல்லோருடைய உள்ளத்திலும் மோதுகின்றன. இவை நியாயமான கேள்விகள். இந்தக் கேள்விகளுக்கு ''ஆம்'' என்ற பதில் தரக்கூடியதாக யாழ்ப்பாணத்து சூழ்நிலை இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

மாணவர்களின் கல்வியில் ''சூழல்'' முக்கிய இடம் வகிக்கின்றது. மாணவர்கள் தமது கல்வியை இயல்பு நிலையில் தொடர்வதற்கு சமகாலச் சூழல் அமைப்புக்கள் மிக மிக விரோதமாக அமைந்துள்ளன. அவற்றில் சில:

★ எவ். எம் ஒலிபரப்புக்கள்.

★ மினி சினிமாக்கள்.

★ வீடியோ படக்காட்சிகள்.

★ தனியார் கல்வி நிலையங்கள்.

★ மதுபான விற்பனை நிலையங்கள்.

எவ். எம். ஒலிபரப்புக்கள்

யாழ்ப்பாணத்தில் மிகவும் தெளிவாகக் கேட்கக் கூடியவை யாழ்ப்பாண ஒலிபரப்பு (பலாலிச் சேவை), வானம்பாடி, (வன்னிச் சேவை), தேசிய சேவை, சர்வதேச ஒலிபரப்பு என்பன.

### செய்தி மடல்

யாழ்ப்பாண ஒளிபரப்பும்- வன்னிச் சேவையும் சினிமாப் பாடல்களையே பெருமளவில் ஒலிபரப்புகின்றன. மொத்தத்தில் அதிகாலையில் தொடங்கி இரவு 10 மணி வரையும் வானொலிகள் சினிமாப் பாடல்களையே ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

மாணவர்கள் வானொலியில் ஒலிபரப்பப்படும் சினிமாப் பாடல்களை பெரிதும் விரும்பிக் கேட்கின்றனர். ஒலிபரப்பப்படும் சினிமாப் பாடல்களோ மாணவர்களின் கல்விச் சிந்தனையைக் குழப்பி பாலியல் உணர்வுகளுக்கு உரமூட்டுவனவாகவும், கட்டிளமைப் பருவத்தினரை நெறி பிறழ்வுக்கு இட்டுச் செல்லுவனவாகவும் அமைகின்றன எனப் பெற்றோர் கவலைப்படுகின்றனர்.

இந்த ஒலிபரப்புக்களினால் மாணவர்கள் தமது நாளாந்த பாட தேவைகளை நிறைவு செய்ய முடியாமலும் பரீட்சைக்குத் தயார் செய்ய முடியாமலும் கண்ணீர் விட்டு அழுவதைக் காணலாம். இதனால் பெற்றோர் கவலைப்படுகின்றனர்.

வானொலியை நிறுத்தி விட்டுப்படிக்கலாம் என கேட்கலாம். ஆனால் சுற்றாடலில் பெரும் சத்தத்துடன் ஒலித்துக் கொண்டிருக்கும் வானொலிகளை நிறுத்துவது யார்? கிராமப்புறங்களில் வானொலிகளைபெரும்சத்தத்துடன் பாடவைப்பது சாதாரண நிகழ்வாகவும் நாகரிகமாகவும் உள்ளது.

மினி சினிமாக்கள்

யாழ். குடாநாட்டில் பெருகிக் கொண்டுவரும் தொழில்களில் மினிசினிமா அரங்கும் ஒன்றாக அமைந்துள்ளது.

மினி சினிமா அரங்குகள் எங்கே அமைய வேண்டும்? எந்த நேரங்களில் காட்சிகள் காண்பிக்கப்பட வேண்டும் அங்கு எத்தகைய படங்கள் காண்பிக்கப்பட வேண்டும் என்பன தொடர்பான கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாமல் மினிசினிமா அரங்குகள் செயற்படுகின்றன.

பாடசாலைகளுக்கு முன்பாகவும் மிக அண்மையிலும் கிராமப் புறங்களில் வீடுகள் தோறும், மக்கள் நெருக்கமாக கூடும் இடங்களிலும் மினிசினிமா அரங்குகள் தன்னிச்சையாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கட்டுப்பாடுகள் இல்லாமல் செயற்பட்டு கவர்ச்சிகரமான போஸ்ரர்கள் விளம்பரங்களுடன் சினிமாப் படங்கள் காண்பிக்கப்படுவது கல்வியில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக பெற்றோர்கள், கல்வியாளர்கள் கவலை கொள்கின்றனர்.

பாடசாலைக்குப் புறப்பட்டு மினிசினிமாவுக்கு செல்வதும், பாடசாலைச் சீருடையுடன் படம் பார்ப்பதும், சினிமாக் கவர்ச்சியால் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதும் சாதாரண நிகழ்வுகளாக உள்ளன.

**ஞான ஆதவன்**

மினி சினிமா உரிமையாளர்கள் மாணவரைக் கவரத்தக்க விதத்தில் கட்டணங்களைக் குறைத்தும் கவர்ச்சிப் படங்களை காட்சிக்கு வைத்தும் இளம் வயதுப் பருவத்தினரைச் சுரண்டுவது கல்வியை பாதிக்காமல் இல்லை.

கட்டுப்பாடுகள் இல்லாத மினி சினிமா கலாசாரம் கல்வியால் மட்டும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை; சமகாலத்திலும் எதிர்காலத்திலும் சமூகத்தில் பல்வேறு விதமான பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

வீடியோ படக்காட்சிகள்

வீடியோ படக்காட்சிகள் கிராமநகர வேறுபாடு இன்றி பரவலாக வீடுகள் தோறும் காண்பிக்கப்படுகின்றன. சந்தோஷமான நிகழ்வுகள் வீடியோ படக் காட்சிகள் இல்லாமல் நிறைவடைவது இல்லை.

ஒரே நாளில் மூன்று, நான்கு, ஐந்து படங்கள் காண்பிக்கப்படுகின்றன. இது மாணவப் பருவத்தினரில் உடல், உள நிலையில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றது.

வீடியோ படக்காட்சி மூலம் சமூகத்துக்கு ஒவ்வாத படங்களும் வயது வந்தோருக்கான படங்களும்காண்பிக்கக் கூடிய வாய்ப்பு வசதிகள் இருப்பதால் ஏற்படும் பாதிப்புக்கள் எல்லா வயதினருக்கும் ஏற்புடையதாகும்.

தனியார் கல்வி நிலையங்கள்

யாழ்ப்பாணச் சமூகத்தில் 1972 ஆம் ஆண்டுக்குப் பின்பு தலையெடுத்த மிக முக்கியமான சமூக அமைப்புக்களில் ஒன்று தனியார் கல்வி நிலையங்கள்.

எப்படி என்றாலும் பிள்ளைகள் கல்வியில் முன்னேற வேண்டும், தம்மால் நிறைவு செய்ய முடியாதவற்றை தமது பிள்ளைகள் மூலம் நிறைவு செய்ய வேண்டும் என்ற பெருவிருப்புடன் பெற்றோர் கல்வியுடன் தொடர்பான ஸ்தாபனங்களுக்கு வரவேற்பளிப்பது இயல்பானதே.

அத்தகைய வரவேற்புக்கு உள்ளாகி வளர்ந்த தனியார் கல்வி நிறுவனங்கள் நீண்டகால அடிப்படையில் சமூகத்துக்கும் முறைசார் கல்வி அமைப்புக்களுக்கும் சவாலாக இருந்து வருவதும், கட்டு

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலைப் படுகொலை நினைவுகளை களுத்துறை சம்பவம் மீட்டுள்ளது

## அமைச்சர் பீரிஸிக்கு நீதிசமாதான ஆணைக்குழு கடிதம்

யாழ்ப்பாணம், டிச.19
களுத்துறைச் சிறையில் நடந்த பயங்கர நிகழ்வானது 1983 ஆம் ஆண்டு ஜூலையில் வெலிக்கடையில் தமிழ் அரசியற் கைதிகள் படுகொலைகள் செய்யப்பட்டதன் விளைவாக தமிழ் மக்களின் மனதில் ஏற்பட்ட காயங்களைப் புதுப்பித்துள்ளது.

யாழ். மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.

களுத்துறைச் சிறையில் தமிழ்க் கைதிகள் மூவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ எல் பீரிஸிற்கு அனுப்பிய கடிதம் ஒன்றிலேயே நீதி சமாதான ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

12-12-97 இல் களுத்துறை மறியற்சாலையில் சில அரசியற் கைதிகள், சக சிங்களக் கைதிகளால் படுகொலை செய்யப்பட்டது எமக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது.

இப் பயங்கர நிகழ்வானது 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 67 தமிழ் அரசியற் கைதிகள் இதே போன்று படுகொலை செய்யப்பட்டதன் விளைவாக தமிழ் மக்களின் மனதில் ஏற்பட்ட காயங்கள், அச்சங்கள், ஐயப்பாடுகள் ஆகியவற்றைப் புதுப்பித்துள்ளது.

"கறுப்பு ஜூலை 1983" வருடாந்த ஞாபகார்த்த நிகழ்வில் ஓடும் உணர்ச்சிகள் இப்போது இடம்பெற்றுள்ள பயங்கர சம்பவத்தினால் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிகழ்விற்கு நான்கு தினங்களின் முன்னர்தான் நாம் தங்களுக்கு வரைந்த மடலில், தென் பகுதியில் உள்ள தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியற் கைதிகளின் அவல நிலை பற்றி அச்சம் தெரிவித்திருந்தோம்.

காணாமற்போன நூற்றுக்கணக்கானோரின் கதி ஏற்கனவே எம்மை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது. இப்பொழுதோ தென்னிலங்கை மறியற்சாலைகளிலே இன்னமும் உயிரோடு இருக்கின்றார்கள் என்று நமக்குத் தெரிந்த அரசியற் கைதிகளின் உயிர் எந்த நிமிடமும் பறிக்கப்படலாம் என்ற அச்சுறுத்தல் எமது உயிரையே பறிப்பது போன்ற வேதனையைத் தருகின்றது.

நீதி அமைச்சராகிய தங்களை நீதியின் பெயரால் கோருகின்றோம்; எஞ்சியுள்ள கைதிகளின் உயிரைப் பாதுகாப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவும், நீதிவிசாரணை மட்டில் அக்கைதிகளின் மனித உரிமை உடனடியாக மதிக்கப்படுவதை உறுதிப்படுத்தவும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### யாழ். ஆஸ்பத்திரியில் இயங்கும்

# பால்வினை நோய் சிகிச்சை பிரிவு மத்திய அரசின் கீழ்

திருநெல்வேலி, டிச.19
இதுவரை காலமும் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையிலுள்ள பால்வினை (பாலியல) நோய்ச் சிகிச்சை நிலையம் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் மத்திய அரசின் சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படவுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் கடிதம் யாழ். அரசினர் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், யாழ். சுகாதார சேவை பிராந்திய பணிப்பாளர் ஆகியோருக்கு கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## நகரில் பொருள்களுடன் சைக்கிள் திருட்டு

வலிகாமம் தெற்கு, டிச.19
மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய், அங்கர் பால்மா பக்கட்டுக்கள் என்பவற்றுடன் யாழ். நகரில் உள்ள புத்தக நிலையம் ஒன்றுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்ட சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரே 12லீற்றர் மண்ணெண்ணெய், 6 லீற்றர் தேங்காய் எண்ணெய், அங்கர் பால்மா பக்கட் ஆகியவற்றுடன் கூடிய தமது சைக்கிளை புத்தக நிலையத்துக்கு முன்பாக நிறுத்தி வைத்துவிட்டுப் புத்தக நிலையத்துக்குச் சென்றதை அவதானித்த திருடர்கள் அவரது சைக்கிளை அபேஸ் செய்து விட்டனர். (ஐ-152)

# யாழ். மாணவர்....

(ஏழாம் பக்கத் தொடர்)
பாடுகள் இல்லாத அமைப்பாக செயற்படுவதும் வரவேற்கத்தக்கது அல்ல என கல்வியாளர்கள் கவலைப்படுகின்றனர்.

பாடசாலைகளில் கல்வி யாருக்கு? எதை? எப்படிக் கற்பிக்கவேண்டும் என்பதும் வகுப்பறை— மாணவர் எண்ணிக்கை, தளபாட அமைப்பு, பாட எண்ணிக்கை, அதற்கான நேர அளவு, தவணை ரீதியிலான பாடத்திட்ட ஒழுங்கமைப்பு, இணைப்பாட விதானச் செயற்பாடுகள். மாணவர்களின் உடல், உள, வயது மட்டங்களுக்கு ஏற்ப ஒழுங்கமைக்கப்பட்டு ஒழுக்க கட்டுப்பாட்டுடன் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

பாடசாலைகளின் கற்றல்-கற்பித்தல், நிர்வாகச் செயற்பாடுகள் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு பல்வேறு அமைப்புகள், அதிகாரிகள் குழுக்கள் செயற்படுகின்றன. குறிப்பிட்ட சட்டதிட்ட சமூக நெறிமுறைகளுக்கு ஏற்ப பாடசாலைகள் செயற்படுகின்றன.

ஆனால் தனியார் கல்வி நிலையங்கள் பாடசாலைகள் பின்பற்றப்படும் ஒழுங்கு முறைகளுக்கு அப்பாற்பட்ட முறையில் எந்த விதமான கட்டுப்பாடுகளும் இல்லாத நிலையில் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றன.

தனியார் கல்வி நிலையங்கள், பாடசாலைகளுக்கு போட்டி நிறுவனங்களாகவும், கட்டுப்பாடுகள் இல்லாமலும் பொறுப்பாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப செயற்படுகின்ற நிலையும், மாணவர்கள் அதனைப் பயன்படுத்துகின்ற நிலைமையும் யாழ்ப்பாணத்தின் கல்வியில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன எனக் கூறப்படுகின்றது.

கல்லூரி அதிபர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் பாடசாலைகளில் வாரம் ஐந்து தினங்கள் அதாவது 30 மணி நேரம் செலவிடும் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்கும் செல்வதால் 60—க்கு மேற்பட்ட மணித்தியாலங்களை செலவு செய்யும் நிலை ஏற்படுகிறது. இதனால் ஏற்படும் உடல், உள ரீதியிலான தாக்கங்கள், ஒழுக்கக் கட்டுப்பாடுகள் சிந்திக்கத்தக்கன என்றார்.

### மதுபான விற்பனை நிலையங்கள்

யாழ். மாவட்டத்தில் கட்டுப்பாடுகளோ, தட்டுப்பாடோ இல்லாத வியாபாரப் பொருளாக மதுபானங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

சாதாரண பெட்டிக்கடையில் கூட தாராளமாக மதுபான வகைகள் விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு இடையில் குறைந்தது மூன்று இடங்களில் மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதை அவதானிக்கலாம்.

கிராம நகர வேறுபாடுகள் இன்றி எல்லா இடங்களிலும் எல்லா விதமான மதுபானங்களையும் தாராளமாகப்பெற்றுக்கொள்ளக் கூடிய நிலை காணப்படுகின்றது.

இது விற்பனையாளர்களுக்கு வாய்ப்பாகவும், மதுப்பிரியர்களுக்கு மேலதிக வசதியாகவும் இருந்தாலும் இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் வயது வேறுபாடு இன்றி எல்லோருக்கும் எல்லா நிலையிலும் ஏற்படுவதை மறுக்க முடியாது ★


# ஆனந்தா புத்தாண்டு நாளேடு - 1998

▼ நாள்தோறும் நட்சத்திரம், திதி, யோகம் முதலிய பஞ்சாங்கக் குறிப்புகள்.
▼ கொண்டாட்ட தினங்கள். ▼ அரச வங்கி வர்த்தக விடுமுறைகள்.
▼ அஞ்சல் கட்டண விவரங்கள். ▼ பெரியார் நினைவு தினங்கள்.
▼ ஒரு முக கலண்டர் ▼ புதிய வைப்பாடுகள்.
▼ மற்றும் முகவரிகள், கொடுக்கல், வாங்கல் எழுதுவதற்கான பக்கங்கள் முதலிய சிறப்பு அம்சங்களையும் கொண்டது. ▼ இத்தனைக்கும் விலை ரூபா 30 மட்டுமே!

விவரங்களுக்கு:- **ஆனந்தா புத்தகசாலை**
(சி/2379) இல. 226, காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம்.



## வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# உப்பு விற்பனை

எமது சங்கத்தினால் உள்ளூர் உற்பத்தித் திட்டத்தின் இருபாலை/செம்மணி உப்பளத்தில் உப்புக் கூட்டுத்தாபன உப்பு விளைவித்தல் முறைப்படி தரமான உப்பு விளைவிக்கப்பட்டுள்ளது தேவையானோர் பொது முகாமையாளர், வலி.கிழக்கு தெ.ப.ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி என்றமுகவரியில் தொடர்புகளை மேற்கொள்ளலாம். உப்பினை மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். கிலோ ஒன்றின் விலை ரூ. 7 ஆகும்.

பொது முகாமையாளர்

நீர்வேலி,
1997—12—17 (சி/2404)


# அந்தியேட்டி அழைப்பும் 45 ஆம் நாள் நினைவஞ்சலியும்



## தெய்வேந்திரஐயர் துஷியேந்திரன் (துஷி)

தாயின் மடியில்: **08 - 12 - 1977**
சந்நிதியானடியில்: **07 - 11 - 1997**

21-12-1997 ஞாயிறு அன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து எமது அன்புச் செல்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தெய்வேந்திரஐயர் குடும்பத்தினர்.

செல்வச் சந்நிதி
தொண்டமானாறு. (51943)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 06 — 10 — 1982



உதிர்வு: 07 — 11 — 1997

## துரைரத்தினம் கார்த்திகேயன் (கார்த்தி)

உன் இனிக்கும் கதைகேட்டு இன்புற்றிருந்தோம். விதியின் வீச்சுக்கு இலக்காகி காலன் கவர்ந்து சென்றானோ உன் உயிரை? ஐ ஒன்பது நாள்களாயினும் எம் நெஞ்சம் மறக்குமோ உன் நினைவை?

21-12-97 ஞாயிறு அன்று காலை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்

த. துரைரத்தினம்
செல்வச்சந்நிதி கோயிலடி,
தொண்டமானாறு. [51941]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒரு சோறு பதம்!

படையினராலும் பொலிஸாரினாலும் காரணம் இன்றிக் கண்டபடி கைது செய்யப்படும் தமிழர்கள் சித்திரவதை செய்யப்படுகிறார்கள்; அவர்களின் அடிப்படை மனித உரிமைகள் பறிக்கப்படுகின்றன; என்பது வழமையும் தெரிந்த உண்மையும் ஆகிவிட்டது.

இந்த நிலையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர்கள், அதிகாரிகள் அவ்வப்போது வாக்குறுதி அளித்தும், விதிமுறைகள் சிலவற்றை வகுத்தும் கூட அநியாயம் பெரிதாகக் குறையவில்லை.

அது ஒரு புறமிருக்க —

கைது செய்து தடுத்து வைக்கப்படுவோர் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படுவதிலும் அவர்களுக்குப் பாதிப்பான தண்டனை வாங்கிக் கொடுக்கும் ''உள்வீட்டு வழிமுறைகள்'' உள்ளன என்பது இப்போது ஊர்ஜிதமாகி உள்ளது.

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாக வைத்து ஒருவரைச் சந்தேக நபராக்கி வழக்குத் தொடரலாம் என்ற சட்ட வசதி பொலிஸாரால் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது.

உண்மையாகவே குறிப்பிட்ட குற்றத்தை இழைக்காத ஓர் அப்பாவி கூட தனக்குக் கொடுக்கப்படும் ''பதப்படுத்தலை''த் தொடர்ந்து தான் அதனைச் செய்ததாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்து விடுவது உண்டு.

அதற்கும் புறம்பாக —

தடுத்து வைக்கப்பட்டவர் தெரிவிக்காத விவரங்களை, அவரைக் குற்றவாளியாக நிரூபிக்கக் கூடிய காரணங்களைச் சோடித்து எழுதிய பின்னர், பலவந்தப்படுத்தி, 'பதப்படுத்தி' ஒப்புதல் வாக்குமூலங்கள் பெறப்படுவதாகவும் முறைப்பாடுகள் உண்டு.

இவை எல்லாவற்றையும் விட வேறும் பல ''சரிப்படுத்துதல்கள்'' பொலிஸ் மட்டத்தில் நடைபெறுகின்றன என்ற விவகாரத்தை நீதிமன்றத் தீர்ப்பு ஒன்று வெளிக்கொணர்ந்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட அக்கரைப்பற்றைச் சேர்ந்த சினித்தம்பி ரவீந்திரனை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தர்மதாஸ ஐயவிக்கிரமா விடுதலை செய்து தீர்ப்பளித்திருக்கிறார்.

தமிழ் தெரியாத ஒருவர் மூலம் ரவீந்திரனின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மொழிபெயர்க்கப்பட்டு அதன் அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணையில் ரவீந்திரன் தரப்பு வழக்கறிஞர் மொழிபெயர்ப்புச் செய்தவரை தமிழில் குறுக்கு விசாரணை செய்தபோது, அவருக்கு தமிழ் தெரியாது என்பது நிரூபிக்கப்பட்டது.

இவ்வாறு இன்னும் எத்தனை தில்லுமுல்லுகள் மூலம் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் பயங்கரவாதிகள் ஆக்கப்படுகிறார்களோ என்று ஐயுற வேண்டி உள்ளது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுபதம் அல்லவா?

காரணம் இன்றிக் கைது செய்யப்படுவோர் எல்லோரையும் பயங்கரவாதிகளாக்கி வழக்குத் தொடர்ந்து தண்டனை வாங்கிக் கொடுத்து விட்டால் பொலிஸாருக்குச் சிறிய பதவி உயர்வு வழங்கப்படுகிறதோ என்னவோ!

தமிழர்கள் என்றால் சட்டத்துக்கு வெளியேயும், சட்டத்துக்கு உள்ளேயும் அப்பாவிகளையும் பயங்கரவாதிகளாகச் சோடித்துக் காட்டலாம் என்ற தன்மையையே இது காட்டுகிறது.

---

ஈ.பி.டி.பி. உறுப்பினர் மரணவிசாரணை:

# அடிக்காதீர்கள் பேசித் தீர்ப்போம் என்று கூற சுடத் தொடங்கினர்

## கடற்படை அதிகாரி சாட்சியம்

யாழ்ப்பாணம், டிச.19

கடற்படையினர் தமது படகைக் கரையில் கட்டுவதற்குச் சென்ற சமயம் அங்கு வந்த சிலர் எமக்கு அடித்தார்கள். நான் அவர்களைப் பார்த்து அடிக்காதீர்கள் கதைத்துத் தீர்ப்போம் எனக் கத்தினேன். அவர்கள் எதையும் காதில் வாங்காமல் என்னையும் அடித்தார்கள். நான் கீழே வீழ்ந்து விட்டேன். பின்னர் அவர்கள் எங்களை நோக்கிச் சுடத்தொடங்கி விட்டார்கள்.

கடந்த 22 ஆம் திகதி ஊர்காவற்றுறைக் கடற்பரப்பில் கடற்படையினருக்கும், ஈ.பி.டி.பி யினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த ஆரம்பிள்ளை அஸ்வத்தின் மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் கடற்படை அதிகாரியான திஸநாயக்க முதியன்சலாகே கருணாதிலக பண்டார என்பவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற அமர்வு நீதிமன்றில் இந்த மரண விசாரணை பதில் நீதிவான் க. கேசவன் முன்னிலையில் நடந்தது.

அவர் மேலும் சாட்சியமளிக்கையில் ஊர்காவற்றுறை துறைமுகத்துக்கு பொறுப்பாக இருந்தவர்களை மேற்பார்வை செய்வதற்காகவே நான் நியமிக்கப்பட்டிருந்தேன். என்னுடன் ஆறுபேர் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

நெடுந்தீவுக்கு விடுதலைப் புலிகள் வந்துள்ளார்கள். எனவே நாம் அங்கு செல்ல வேண்டும் எனக் கூறி ஈ.பி.டி.பி. உறுப்பினர்களில் சுமார் 30 பேர் வரையில் வள்ளங்களில் புறப்பட்டுச் சென்றார்கள். இவர்களுக்கு கடற்படையினரே வள்ளங்களை வழங்கினர்.

இவர்கள் சென்ற சிறிது நேரத்தில் சுமார் மாலை 4 மணியளவில் லோகன் என்பவர் நாம் நின்ற இடத்துக்கு வந்தார். இரண்டு படகுகள் அடிபட்டு விட்டன. கடற்படையினர் நெடுந்தீவுக்குச் செல்ல விடாது தடுக்கின்றார்கள். நாம் போவதற்கு அனுமதி வழங்க வேண்டும் எனக் கேட்டார்.

நான் கடற்படைத் தலைவருக்கு அறிவித்தேன். அவர் படகு அடிபட்டு இருவர் காயமடைந்துள்ளனர் உடனே வாகனம் அனுப்பச் சொன்னார். நான் வாகனத்தை அனுப்பி சிறிது நேரத்தில் கடற்படையினர் லோகன் இருந்த இடத்திற்கு காயமடைந்த இருவரை கொண்டு வந்தனர்.

லோகன் தனது தொலைத்தொடர்பு சாதனம் மூலம் நெடுந்தீவுக்குப் போக வேண்டாம் திரும்பி வருமாறு அழைத்தார்.

சுமார் இரவு 7 மணிக்கும் 7.15 ற்கும் இடையில் கடற்படையினர் படகுகளைக் கட்டச் சென்ற சமயம் அங்கு வந்த ஈ.பி.டி.பி. யினர் எம்மை அடிக்கத் தொடங்கினர். நான் பேசித் தீர்க்கலாம் என்று கூறியும் அவர்கள் கேட்காமல் என்னையும் தாக்கினர். இதனால் நான் கீழே வீழ்ந்து விட்டேன்.

அப்போது பதுங்கித் தாக்கும் படையினரும் அங்கு வந்தனர். அவர்களைப் பார்த்து சுட்டார்கள் என்னுடன் இருந்தவர்கள் எல்லாம் பாதுகாப்புத் தேடி மறைந்து கொண்டனர். வந்தவர்கள் ஆர்.பி.ஜீ. குண்டுகள் எல்லாம் ஏவினார்கள் சிறிது நேரத்தில் சத்தம் ஓய்ந்தது.

நான் எழும்பிச் சென்று பார்த்தபோது ஒருவர் காயமடைந்திருந்தார். ஒருவரது துப்பாக்கி பறிக்கப்பட்டிருந்தது. மோட்டார் சைக்கிள் ஒன்று, துப்பாக்கி, ஆர்.பி.ஜீ. சாஜர், வெற்றுத் தோட்டா என்பன காணப்பட்டன.

இச்சம்பவத்தில் எனக்கும் வேறு சிலருக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டிருந்தன. எனக்கு வந்தவர்களில் லோகனை மட்டுமே தெரியும். நான் இது பற்றி உடனேயே பொலிஸுக்கு தெரிவித்தேன் — என்று அவர் தெரிவித்தார்.

பதில் நீதிவான் கேசவன் மேல் விசாரணையை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார்.

கடந்த 3 ஆம் திகதி இச்சம்பவம் தொடர்பாக சிப்பாய் ஒருவர் சாட்சியமளித்தது தெரிந்ததே. (ஐ 9)

---

# சமய நிகழ்ச்சிகளில்

யாழ்ப்பாணம், டிச. 19

உரும்பிராய் பரிவத வர்த்தனி அம்மன் கோயிலில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ க. மு. சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் திருவாசக முற்றோதல் நடைபெறும். (ஐ-4)

## தையற் பொருள் கண்காட்சி

யாழ்ப்பாணம், டிச, 19

தேசிய பயிலுநர் சபையின் ஆதரவில் யாழ். செஞ்சிலுவைச் சங்கம் நடத்தும் தையற் பயிற்சி வகுப்பு மாணவர்களின் தையற் பொருள்கள் கண்காட்சி நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையகத்தில் நடைபெறவிருக்கின்றது.

பிரதம விருந்தினராக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவுத் தலைவர் டாக்டர் வி. தியாகராஜா கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

நாளையும், நாளைமறுதினமும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பொது மக்கள் கண்காட்சியைப் பார்வையிடலாமென்றும், கண்காட்சியில் வைக்கப்படும் பொருள்களை குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படும் என்றும் செஞ்சிலுவைச் சங்கச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

---

# நண்பரையும் கைலைக்கு அழைத்துச் சென்ற சுந்தரர்

திருக்கைலாச மலையிலே இறைவனுக்கு மலர் செய்தல், மாலை தொடுத்தல் ஆகிய தொண்டுகளை மேற்கொண்டிருந்தார் ஆலாலசுந்தரர் என்ற சிவனடியார்.

தேவர்களும், அசுரர்களும் அமிர்தம் பெறும் பொருட்டுத் திருப்பாற் கடலைக் கடைந்த போது எழுந்த ஆலகால விடம் உலகெங்கும் பரவி உயிர்களை வருத்தியது. சிவபிரான் கட்டளைப்படி சுந்தரர் விடத்தின் வலிமையை அடக்கி அதை இறைவன் முன் சேர்த்தார். இதன் காரணமாக ஆலால சுந்தரர் என்று பெயர் பெற்றார்.

ஒருதினம் வழக்கம் போல நறுமலர் கொய்ய நந்தவனத்தை அடைந்த போது அம்பிகையின் சேடியர்களான அனிந்திரையும், கமலினியும் மலர் பறித்துக் கொண்டிருந்தனர். ஆலாலசுந்தரர் அவ்விரு மங்கையரையும் கண்டு காதல் கொண்டார். அவர்களும் ஆலாலசுந்தரரின் அழகில் மயங்கித் தம் நிலை இழந்தனர். பின்னர் ஒருவாறு மனம் தெளிந்து சுந்தரர் சிவனிடமும் மங்கையர் அம்பிகையிடமும் சென்றனர்.

எல்லா உயிர்களுக்கும் உள் நின்று அருள் சுரக்கின்ற சிவபிரான் ஆலாலசுந்தரரின் எண்ணத்தை அறிந்தார். சுந்தரரை விளித்து ''நீமாதர் மேல் மனம் வைத்தாய். ஆகையால் பூமியில் பிறந்து அவர்களுடன் காதல் இன்பத்தில் கலந்து மகிழ்ந்து, பின்னர் இங்கு வருக'' என்று பணித்தார்.

பூமிக்கு வந்த ஆலால சுந்தரர், தென் தமிழ் நாட்டிலே திருநாவலூர் என்னும் பதியிலே, இறைவனுக்குத் தொண்டு புரிந்து வாழ்ந்த சடையனாருக்கும், இசைஞானியாருக்கும் மகவாக அவதரித்தார். பெற்றோர் குழந்தைக்கு நம்பியாரூரர் என்று பெயர் சூட்டினர்.

ஆலால சுந்தரர் மேல் காதல் கொண்ட அனிந்திரை திருவொற்றியூரிலே பிறந்து சங்கிலியார் என்றும், கமலினி, திருவாரூரிலே பிறந்து பரவையார் என்றும் பெயர் பெற்று, அம்பிகையை வழிபட்டு வாழ்ந்து வந்தனர்.

பராயமடைந்த நம்பியாரூரர் சிவத்தலங்களுக்குச் சென்று திருப்பதிகங்கள் பாடித் திருவாரூரை அடைந்து, வன்மீக நாதரை (வன்மீகம்: புற்று; லிங்க மூர்த்தியைப் புற்று மூடியிருப்பதனால் வன்மீக நாதர் என்று அழைக்கப்படுகிறார்) தரிசித்து வணங்கி அங்கு சில நாள் தங்கியிருந்தார். முந்தைய வினையின் விளைவால் சுந்தரரும் பரவையாரும் சந்தித்தனர். சிவபிரான் கட்டளைப்படி அடியார்கள் அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தனர்.



சில காலம் கழித்துச் சிவத்தல யாத்திரையை மேற்கொண்ட நம்பியாரூரர் திருவொற்றியூரை அடைந்தார். ஊழ் வலி அவரையும் சங்கிலியாரையும் சந்திக்கச் செய்தது. இறைவன் இருவரையும் இணைத்து வைத்தார்.

நம்பியாரூரர் சங்கிலியாருடன் வாழ்ந்திருக்கும் காலத்தில் திருவாரூர் வீதிவிடங்கப் பெருமானை [illegible] திருவாரூருக்குச் சென்ற சுந்தரர் தாம் சங்கிலியாரைத் திருமணம் செய்தமையால் பரவையார் கோபமுற்றிருப்பதை அறிந்து இறைவனிடம் முறையிட்டார். இறைவன் பரவையாரிடம் தூது சென்று அவரைச் சாந்தப்படுத்தி இருவரையும் சேர்த்து வைத்தார்.

இருவரும் முன்போலக் கூடி மகிழ்ந்திருக்கும் காலத்திலே —

சேர மன்னர் பரம்பரையில் தோன்றிய சிவபக்தரான பெருமாக் கோதையார் என்பவர் சேர நாட்டை ஆட்சி புரிந்தார்.

இவர் இளமைக் காலத்திலே அரசு செலுத்தும் ஆசையைத் துறந்து சிவனடி சேரும் அவாவுடன் திருவஞ்சைக் களம் என்னும் சிவத்தலத்தில் சரியைத் தொண்டில் ஈடுபட்டிருந்த போது அந்த நாட்டை ஆட்சி புரிந்த செங்கோற் பொறையன் என்ற (அரசன்) சேர மன்னன் யோக முயற்சி செய்ய விரும்பித் தவம் செய்ய வனம் சென்றான்.

மந்திரிமார் ஒன்று கூடித் திருவஞ்சைக் களத்தில் சிவத்தொண்டு செய்து கொண்டிருந்த பெருமாக் கோதையாரிடம் சென்று ''மலை நாட்டை நாங்களே முடிசூடி ஆட்சி புரிய வேண்டும்'' என்று வேண்டினர்.

சிவபிரான் பெருமாக் கோதையாருக்குப் பக்தி வழுவாது அரசியற்றும் சக்தி, அறிவு, ஆற்றல், வீரம் ஆகியவற்றைஈந்தருள சுபநாளிலே, சுபவேளையிலே முடிசூடி ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

சுந்தரரின் பெருமைகளைக் கேள்வியுற்ற பெருமாக் கோதையார் திருவாரூருக்குச் சென்று சுந்தரரைத் தரிசித்து அவருடன் பரவையார் வீட்டில் இருந்தார். சில காலம் கழித்து சுந்தரரை அழைத்துக் கொண்டு சேர நாட்டிடிற்குப்போய் அரசாட்சி செய்தார்.

ஒரு தினம் சுந்தரர் திருவஞ்சைக் களத்துக்குச் சென்று தம்மை பிரபஞ்ச வாழ்க்கையினின்றும் நீக்கியருளுமாறு சிவபிரானை வேண்டினார். அந்தச் சமயம் இறைவனால் அனுப்பப்பட்ட வெள்ளையானை திருவஞ்சைக் களத்துக்கு வர சுந்தரர் அதில் ஏறிக் கைலைக்குச் செல்லும் போது நண்பரான சேரமான் பெருமாள் நாயனாரை (பெருமாக் கோதையாரை) நினைத்தார்.

இதையறிந்த சேரமான் பெருமாள் நாயனார், அங்கு நின்ற குதிரை ஒன்றின்மேல் ஏறி தன் காதில் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதினார். குதிரை ஆகாயத்தில் பாய்ந்து சுந்தரருடைய வெள்ளை யானைக்கு அருகில்வர, இருவரும் கைலையை அடைந்து சிவபிரானை வணங்கினர்.

நம்பியாரூரர் முன்போல ஆலால சுந்தரராகி தாம் செய்த இருத்தொண்டை செய்ய சேரமான் பெருமாள் நாயனார் சிவகணத்தவராகி சிவனைச் சேவித்து இருந்தார்.

— மூளாய் அருணாசலம்

---

## நாளை

**மார்கழி 5**

சனிக்கிழமை

திதி: ஷஷ்டி

பிற்பகல் 12.24 வரை.

நட்சத்திரம்: பூரம்

முழுநாளும்

ஜபநேரம்: 3.24 - 4 54

ராகுகாலம்: 9 24 10.54

(பகலுக்கும் இரவுக்கும் வழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். தேர்தலை ஒத்திவைக்குமாறு கூட்டணியினர் மீண்டும் கோரிக்கை

## நேற்று ஜனாதிபதிக்கு அவசர 'பக்ஸ்'

கொழும்பு, டிச. 19

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபை தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதியிடம் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் நேற்று அவசர 'பக்ஸ்' ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்தார்.

அவரது 'பக்ஸ்' இல் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;-

சகல தமிழ் அரசியல் கட்சிகளும் வேட்புமனு கோருவதையும் தேர்தலையும் ஒத்திவைக்கும்படி தங்களிடம் வலியுறுத்தியுள்ளன.

இடம்பெயர்ந்துள்ள ஆயிரக்கணக்கான தமிழர்கள், நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் இதுவரை சொந்த இடங்களுக்குத் திரும்பவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் இடம்பெயர்ந்தவர்கள் இடம்பெயர்ந்த இடங்களில் இருந்து வாக்களிப்பதற்கு இடமளிக்கப்பட்டது. ஆனால் உள்ளூராட்சி சபை தேர்தல்களில் அதற்கு சட்டத்தில் இடமில்லை.

யாழ். மாநகர சபையில் 2, 3 முஸ்லிம்கள் அங்கம் வகித்துள்ளார்கள். ஓரிரு தடவைகள் முதல்வர், பிரதி முதல்வர் பதவிகள்கூட வகித்துள்ளார்கள்.

யாழ். மாவட்ட மக்கள் மத்தியில் பதற்றம், பயம், பீதி நிலவுகிறது. இத்தேர்தலில் போட்டியிட பொருத்தமானவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள்.

இன்றைய சூழ்நிலையில் பொருத்தமானவர்களை வேட்பாளர்களாக நிறுத்த முடியாத நிலையிலுள்ளோம்.

வாக்காளர்கள் மத்தியில் நிலவும் பயம், பீதி காரணமாக வாக்களிப்பு மிகவும் மந்தமாகவே இருக்கும்.

வாக்காளர் இடாப்பு பழையவை. புதிய வாக்காளர்கள் பதிவு செய்யப்படவில்லை.

வாக்காளர் இடாப்புகளில் பதிவு செய்யப்பட்டவர்களில் அநேகமானவர்கள் வாக்களிக்க சமுகம்தராத நிலை ஏற்படும் போது நிறைய ஆள் மாறாட்டங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

சகல கட்சிகளுக்கும், அக்கட்சிகளின் வேட்பாளர்களுக்கும் பாதுகாப்பு அளிப்பது என்பது அரசுக்கு கடினமானதாக இருக்கும்.

போட்டியிடும் கட்சிகளில் சில கட்சிகளுக்கு சொந்தமான ஆயுத ஆள்பலம் உண்டு ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆயுத ஆள்பலம் கொண்ட கட்சி அல்ல இந்நிலையில் 'ஆயுத ஆள்பலம்' விவகாரம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு பாதகமானதாகவே அமையும்.

தேர்தல் சட்ட பிரகாரம் வாக்கு சாவடிகள் அமைக்க முடியாது என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். இதனால் பல வாக்கு சாவடிகள் இணைக்கப்பட்டு கொத்தணி வாக்குசாவடிகள் தான் அமையவுள்ளன.

இதனால் பொது போக்குவரத்து வசதிகள் போதியளவு இல்லாத நிலையில் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வசதியீனங்கள் ஏற்படும்.

பொதுமக்கள் கருத்துக்களை பெறுவதற்காகவே தேர்தல்கள் நடைபெறுவது மரபு.

இந்நிலையில் மேற்படி தேர்தல் நியாயமான, சுதந்திரமான தேர்தலாக நடைபெறாது என அஞ்சுகின்றோம்.

இந்நிலையில் மக்களின் உண்மையான கருத்துக்களை பிரதிபலிப்பதாக இத்தேர்தல் அமையமாட்டாது.

மேற்படி காரணங்களை கவனத்தில் எடுத்து இத்தேர்தல் ஒத்திவைக்கப்படவேண்டும் எனமீண்டும் வலியுறுத்துகின்றோம் இப்படித்தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-21)

### கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

அவரது குடும்பத்தைச் சேர்ந்த வேலாயுதம் நடராசா (வயது 62), நடராசா தனேஸ்வரி (வயது 21), நடராசா கனகேஸ்வரி (வயது 29), நடராசா குகச்சந்திரன் (வயது 19), நடராசா புஸ்பராணி (வயது 48) மற்றும் நவரத்தினராஜா சுஜன் ஆகியோர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நடராசாவின் மற்றொரு மகன் பரீட்சைக்குச் சென்றதால் தப்பியதாகக் கூறப்பட்டது.

இச் சம்பவம் குறித்து ஆழ்ந்த துக்கத்தையும் அனுதபத்தையும் வெளியிட்டுள்ள ஈ.பி.டி.பி. அமைப்பினர் சந்தேகத்துக்குரிய பொருள்களை, வெடிக்காத ஷெல்களை எவரும் தொடக்கூடாது என்று அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். (இ-3-9)

### வதிரியில்..

(முதலாம் பக்கத்தொடர்)

தாகவும் —

எனினும் இந்தச் சம்பவத்தின் போது இரு படையினர் காயமடைந்ததாகவும் —

ஐவரின் சடலங்கள் அப் பகுதியில்காணப்பட்டதாகவும்— ஊர்ஜிதப் படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

காயமடைந்த இரு படையினரும், மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டு, பின்னர் உடனடியாக பலாலிக்கு அனுப்பி வைக்கப்பட்டனரெனவும் தெரியவருகின்றது. (இ-3-104)

### கட்சிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

வந்தனர்.

ஈ.பி.டி.பி. அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்ட எஸ். இராமேஸ்வரன் தலைமையிலான குழுவும் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. (இ-3-9)

மாதகல்

**புனித தோமையார் ஆலய திருவிழா**

மேற்படி ஆலய வருடாந்த திருவிழா 21-12-97 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். சனிக்கிழமை பி.ப. 5-00 மணிக்கு நற்கருணைவழிபாடும், மறுநாள் காலை 7-15 மணிக்கு திருநாள் திருப்பலியும், புனிதரின் திருச்சுருபப் பவனியும் நடைபெறும்.

பங்குத்தந்தையும் பங்குமக்களும்
புனிததோமையார் ஆலயம் மாதகல்.
(51949)

**சேவைகள்/ விற்பனை**

V H. F., U. H. F. அன்ரனாக்கள் சிறந்த முறையில் பூட்டிக் கொடுக்கப்படும். தையல் மெஷின்களும் திருத்திக் கொடுக்கப்படும். புதிய V. D. O. டெக்குகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
அ. அற்புதகுமார்,
5, டச்சு வீதி,
சாவகச்சேரி.
(சி/2400)

**எமது புதிய வெளியீடுகள்!**

அஜித்குமார், மந்த்ரா
* ரெட்டை ஜடை வயசு

அப்பாஸ், சிம்ரன்
* பூச்சூடவா

ராம்கி, விஜயசாந்தி
* தடயம்

மம்முட்டி, ரோஜா
* அரசியல்

இவையனைத்தும் தரமான பிரதியில் வெளிவந்துள்ளன.

சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/2408)

**கண்ணீர் அஞ்சலி**

எமது சக ஆசிரியை
திருமதி உதயமலர் ஜெயக்குமார்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி செல்லாச்சி வல்லிபுரம்
அவர்கள் 1997-12-17 இல் காலமானதையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

ஆசிரியர், ஊழியர் நலன்புரிச் சங்கம்
யா/ஞானாசாரியார் கல்லூரி
கரவெட்டி.
(சி/2405)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19-12-97 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இரவு நேரம் தபால் பிரிக்கும் வேலை மட்டக்களப்பில் நிறுத்தம்

மட்டக்களப்பு, டிச. 19

மட்டக்களப்பு பிரதம தபால் நிலையத்தில் இரவு நேர தபால் பிரிப்பு அலுவல்கள் இடைநிறுத்தப் பட்டுள்ளன.

ஒட்டோ குண்டு வெடிப்புச் சம்பவத்தால் தந்தி சேவகர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்பு பாதுகாப்புப் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகத் தபால் சேவகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து இரவுநேரக் கடமைக்குத் தபால் சேவகர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளதை அடுத்தே இரவுநேர தபால் பிரிப்பு அலுவல்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. (இ-21)

### தவிப்..

(முதலாம் பக்கத் தொடர்)

சிறிய ஆயுதங்களைக் கொண்டு புலிகள் முதலில் தாக்குதலை ஆரம்பித்தனர்.

அதேநேரம் - ஏறாவூர் தளவாய்ப் பகுதியில் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார் பொதுமகன் ஒருவர் காயமடைந்தார். (உ-3)

### மட்டக்களப்பு....

(முதலாம் பக்கத் தொடர்)

சிப் பிரயோகம் காரணமாகச் சுவர்களில் துப்பாக்கிரவைகள் துளைத்துள்ளன.

வாசலில் நிறுத்தப்பட்டிருந்த அவரின் உத்தியோகபூர்வ வாகனமும் சேதமடைந்துள்ளது.

இச்சம்பவத்தின்போது மாநகர முதல்வரும் குடும்ப உறுப்பினர்களும் உறக்கத்திலிருந்தனர்.

மட்டக்களப்பு பொலீஸாரும் இராணுவ அதிகாரிகளும் விரைந்து வந்து விசாரணைகள் மேற்கொண்டனர். (இ-21)

### மரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)

நாதன் கோபி (வயது 6) என்பவரே இறந்தவர் ஆவார்.

இவர் கட்டைப்பிராயில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்ற சமயம் அங்கு மரத்தில் ஏறிய போதே நேற்று மதியம் 1.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. (இ-9)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா அருளப்பு

இருபாலையைப் பிறப்பிடமாகவும், நல்லூர் முடமாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அருளப்பு (டுபாய்) 16-12-97 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-மரியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், ரஞ்சினியின் அன்புக் கணவரும், றெஜீனா, ஜெனிஸ், நிரோஜன், அனுஜன் (நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய மாணவர்கள்) ஆகியோரின் தந்தையும், றெயிலர் தம்பிராசா (ப.நோ.கூ. சங்க பொ சபை உறுப்பினர்), இராசமணி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20-12-97) கொழும்பில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. றஞ்சினி (மனைவி)
ஆனந்தசூரியர் (மைத்துனர்)

449/3, இராமலிங்கம் றோட்,
முடமாவடி,
நல்லூர்.
(51955)

### நல்லதம்பி வல்லிபுரம்

M.Sc Diploma in Education

(ஓய்வு பெற்ற முன்னைநாள் விரிவுரையாளர், பலாலி, அளுத்கம ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வேலணை—5 ஐ வசிப்பிடமாகவும், தற்போது 186/23 குருநாதர் சுவாமி கோயில் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான நல்லதம்பி வல்லிபுரம் 18-12-97 இல் காலமானார்.

இவர் அன்னலட்சுமியின் (ஆசிரியர், சன்மார்க்க மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும், அனவரதன் (சித்த மருத்துவத்துறை, 3ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம், கைதடி), வேலினி (விவசாயபீடம் 1 ஆம் வருடம் பேராதனை பல்கலைக்கழகம்), சுகந்தன் (பொறியியல்பீடம் 1 ஆம் வருடம் பேராதனைப் பல்கலைகழகம்), மாதினி (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், காலஞ் சென்ற நல்லதம்பி–இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற சுப்பிரமணியம் (மலேசியா), காலஞ் சென்ற வேலாயுதம் (ஆசிரியர்), சிவஞானம், மங்கையர்க்கரசி (மலேசியா) ஆகியோரின் சகோதரரும், பழனிவேற்பிள்ளை (ஆசிரியர்), இரத்தினராசா (கல்விப்பணிப்பாளர் வலயம்-1 யாழ்ப்பாணம்), செல்வராசா (A.O. நகரசபை, வவுனியா), கனகநாயகம் (விரிவுரையாளர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை, பலாலி), திசநாயகம்பிள்ளை (முதன்மை ஆசிரியர், சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-12-97) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இல. 186/23 குருநாதசுவாமி கோயில் ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சு. பழனிவேற்பிள்ளை (மைத்துனர்)
(சி/2410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org